# போர்வாள்

வாள் 4] 28-10-50 வீச்சு 9

## 24-10-50 செவ்வாய்க் கிழமை!

★

—— என்றென்றும் நாம் மறக்கமுடியாத நாள்!

★

அன்றைய தினம்தான் டில்லி ஆதிபத்யத்தின் தூதுவர்
அன்பர் ஆச்சாரியார் சென்னைக்கு வந்தார்.

★

அதுபோது திராவிடம் பெற்ற பரிசுகள் :—

1000 பேருக்குப் படுகாயம்.

60 பேர் கைது.

34 பேருக்குச் சிறைவாசம்.

பொது மக்களுக்குப் பலமான தடியடி!

எண்ணற்ற தோழர்கள், இரத்த வெள்ளத்தில்!

★

டில்லியுடன் இணைந்திருப்பதால் நாம் பெற்ற
பரிசுகள் இவை.

★

இனியும் நாம் டில்லியுடன் இணைந்திருப்பதுதான்
நியாயம் என்று கருதுகிறீர்களா? காங்கிரஸ் திராவிடர்
களே—பதில் கூறுங்கள்.

சிரியர்கள்:- காஞ்சி, மணிமொழியார்.
மா. இளஞ்செழியன், B.A.(HONS)

விலை 2 அணா

Best copy available.

# போர்வாள்

[ திராவிடர் வார வெளியீடு ]

| வாள் 4 | திருவள்ளுவர் ஆண்டு 1981 ஐப்பசி 12<br>28—10—50 சனிக்கிழமை | வீச்சு 9 |
|---|---|---|


# சென்னை வீதிகளில் சிந்திய இரத்தம்

ஆணவம் மிக்க ஆட்சியாளர்களின் அக்ரமம் மிக்க தடியடியால், வலது காலிலும் வலது கையிலும் வன்மையாகத் தாக்குண்டு வெந்துயர் அடைந்துள்ள **பன்மொழிப் புலவரே — பேரறிஞர் அப்பாதுரையே!**

மாதர் குலத்தவர் என்பதையும் பாராது, ஈவு இரக்கம் என்பதையும் அறியாது, காங்கிரஸ் கனம்களால் அனுப்பிவைக்கப்பட்டவர்கள், குண்டாந்தடியால் தாக்கியபோதும், கொண்ட கொள்கையை மறவாமல் அறப்போர் புரிந்த **அருந்தமிழ்ச் செல்வியே— செல்வக் கண்ணம்மையே!**

நான்கு போலீசாரால் சூழப்பட்டு, நால்வராலும் அடிக்கப்பட்டு, காலிலும் கையிலும் இடுப்பிலும் முதுகிலும் தியாகத் தழும்புகள் பெற்றிருக்கும் **நீட நெஞ்சு படைத்த — தீரர் கண்ணபிரானே!**

வடநாட்டு ஏகாதிபத்யத்தின் முன்னேடும் பிள்ளையாக இருக்கும் "மூதறிஞர்" ஆச்சாரியாருக்குக் கருப்புக் கொடி காட்டும் கடமையைச் செய்யவந்த இடத்தில், கனமான அடிபட்டுக் கை கால் அசைக்க முடியாநிலை பெற்றிருக்கும், சென்னை மாவட்டத் தி. மு. க. பொருள் உறுப்பினரே — **செயல் வீரர் சி. வி. ராஜனே!**

சின்ன உருவமும் சிறிய உடலமும் பெற்றிருந்தாலும், ஆழ்ந்த கட்சிப் பற்றும் அசைக்க முடியா இன உணர்ச்சியும் வாய்க்கப் பெற்று, அந்தக் கட்சிப் பற்றுக்கும் இன உணர்ச்சிக்கும் அரிய நற் பரிசுகளாக, தோலிலும் மார்பிலும் தடியடிபட்டு, நொந்த உடலினராயிருக்கும் **நண்பரே — இளைஞர் முனுசாமியே!**

சிரித்த முகத்துடனே, சீறி வந்த தடியடியை ஏற்று, வீரத் திராவிடன் நான் என்பதை, விளக்கமாக எடுத்துக் காட்டிய, **டாக்டர் கணேசனே! சுயமரியாதைச் சூருவளியே!**

வெடுக் வெடுக்கெனப் பேசும் பண்பு இயற்கையாக அமைந்திருந்தாலும், ஆச்சாரியார் வருகையன்று மிக அமைதியாக இருந்து கருப்புக் கொடி காட்டி, அதற்காகத் தடியடிபட்ட காஞ்சி நகராட்சி உறுப்பினரே! **தோழர் சி. வி. இராசகோபாலே!**

சேரன் செங்குட்டுவனின் வழிவழி வந்த வீரர்கள் நாம்— பூனைகள் அல்லர்— புலிநிகர் மாந்தர் — என்பதை, சொல்லால் அல்ல! செயலால் விளக்கி, தடியால் அடிபட்டு, தியாக முத்திரை பெற்ற **மொகைதீனே! முல்லை வடிவேலே!**

அடைந்தே தீருவோம் திராவிடத் தனியரசை என்ற வீர முழக்கத்தை நடைமுறைக் கீதமாக்க, சென்னை மண்ணில் சென்ற செவ்வாயன்று செங்குருதி சிந்திய **ஓராயிரத்துக்கு மேற்பட்ட உத்தமர்களே! தோழர்களே! திராவிட முன்னேற்றக் கழக வீரர்களே!**

உங்கள் அனைவருக்கும், திராவிடத் திருநாட்டின் அன்புக் குழந்தைகளாகிய யாங்கள் ஐந்துகோடிப் பேரும் எங்கள் வணக்கத்தைச் சமர்ப்பித்துக் கொள்கிறோம்.

நீங்கள், ஆச்சாரியார் சென்னை வந்த அன்று, சென்னை வீதிகளிற் சிந்திய இரத்தம் வீண் போகாது— உறுதி கூறுகிறோம்.

அன்று, நீங்கள் சிந்திய இரத்த வெள்ளத்தின் ஒவ்வொரு துளியும் வெறும் இரத்தத் துளி அன்று—வடநாட்டு ஏகாதிபத்தியத்தின்மீது வீசப்பட்ட ஒவ்வொரு வெடிகுண்டு —அதை நாங்கள் நன்றாக அறிவோம்! எங்களைவிட சென்னை ஆட்சியாளர்கள் மிக நன்றாக அறிவர்! அவர்களையும்விட டில்லி ஏகாதிபத்யம் அந்த உண்மையைத் தெள்ளத் தெளிய உணர்ந்தே இருக்கிறது.

திராவிடநாடு திராவிடருக்கே என்ற நமது இலட்சியம் வெற்றி பெற்று, திராவிடத் தனியரசு அமைந்து, வீரத் திராவிட இனப்

# இராமராஜ்ய சர்க்காரின் தடியடி தர்பார்!



24—10—50 செவ்வாயன்று ஆச்சாரியார் சென்னை வந்தபோது, கோட்டைப் பகுதியில், திரண்டிருந்த திராவிட மக்களை, போலீசார் தடியால் அடித்து விரட்டும் காட்சி.

உலக மன்றத்திலே தனக்குரிய உயரிய இடத்தைப் பெற்றாகவேண்டுமானால், நாம், திராவிடர்கள், எத்தனையோ முறை தியாகத் தீயிலே குதித்துத்தானாக வேண்டும். நம்மிலே எத்தனையோபேர், நம் உயிர்களையும் இலட்சிய வெற்றிக்கான காணிக்கையாகக் கொடுத்துத்தானாக வேண்டும். நம்மிலே ஒரு தாளமுத்தல்ல, ஒரு நடராசனல்ல, ஒரு வேலாயுதமல்ல—ஆயிரமாயிரம் தாலமுத்துகளும் நடராசன்களும் வேலாயுதங்களும் தோன்றித்தானாகவேண்டும். சொத்து சுகத்தை மறந்து, குடும்பவாழ்வை மறந்து, அண்ணன் தம்பிகளை மறந்து, அன்னை தந்தையரை மறந்து, எத்தனையோ பேர், குடும்பம் எனும் சிறையை விட்டு வெளியேறும் சிங்க ஏறுகளாக மாறித்தானாக வேண்டும். ஆயிரம் ஈட்டிகள் ஒரே சமயத்தில் மார்பு நோக்கிப் பாய்ந்து வந்தாலும், அவற்றைப் புன்முறுவல் பூத்த முகத்துடனே ஏற்றுக்கொள்ளும் திடசித்தம் படைத்தவர்கள், கலங்கா நெஞ்சம் கொண்டவர்கள், உள்ளத்தை எஃகுக் கூடமாக ஆக்கிக் கொண்டவர்கள் நம் வட்டாரத்திலே நூறு நூறாக அல்ல, ஆயிரமாயிரமாகக் கூட அல்ல, இலட்சக்கணக்கானவர்கள் புறப்பட்டுத்தானாக வேண்டும்.

ஐந்து கோடித் திராவிடர்கள் அருஞ் சிறப்புடன் வாழ நாம் ஒரு ஐந்நூறு பேர் காலப் பள்ளத்தில் குதித்து மரண வீட்டில் உலவினால் தானென்ன என்று எண்ணும் தைரியம், வீரம், கடமையுணர்ச்சி, தியாகசிந்தை நம்மிலே ஏராளமான தோழர்களுக்கு ஏற்பட்டுத்தானாக வேண்டும்.

'கஷ்டநஷ்டமடைவது' என்னும் விலையைக் கொடுத்துத்தான் 'இலட்சிய வெற்றி' என்னும் அரும்பொருளை வாங்கவேண்டும். இது உலகப் பொதுவிதி. இந்த விதிக்கு, தம் இலட்சியத்திலே வெற்றிபெற விழையும்யாரும், தலைகுனிந்துதான் தீரவேண்டும்.

திராவிடநாட்டைத் திராவிடர்தான் ஆளவேண்டும், பிற நாட்டார் ஆளக்கூடாது என்று தெரிவிப்பது மிக மிக நியாயமான கருத்து. ஆனால் வெறும் நியாயத்தை மட்டும், மதித்து நடக்க, உலகம், எப்போதுமே தயாராக இருப்பதில்லை. நியாயம், போதுமான அளவு, பலத்தையும் தன் பக்கம் சேர்த்துக் கொண்ட பிறகுதான், உலகம், நியாயத்தை மதிக்க முன்வரும்.

எனவே, திராவிடநாடு திராவிடருக்காக வேண்டுமானால், அப்படிக் கேட்பது மிகவும் நியாயமான கோரிக்கை என்பதை மறுக்க முடியாத ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டிவிட்டால் மட்டும் போதாது. அந்தக் கோரிக்கையை ஆதரித்து நிற்கும் இயக்கத்தை, ஆட்சியாளர்கள் மதித்தே தீரவேண்டிய அளவு, பலமுள்ளதாக மாற்றி அமைத்தாகவேண்டும்.

அப்படி அமைத்தாகவேண்டுமானால், சென்ற செவ்வாயன்று செங்குருதி சிந்திய தீரத் திராவிடர்களே, உங்களைப்போன்ற உறுதி படைத்த உள்ளத்தவர்கள், ஆயிரமாயிரவர், எத்தகைய ஆபத்துகளையும் ஏற்றிட அஞ்சாதவர்களாகப் பொதுவாழ்வுப் போர்க்களத்துக்கு வந்தாகவேண்டும்.

நம் இலட்சியம் விரைவிலே வெற்றி பெறவேண்டுமானால், தியாகத் தழும்புகள், நம் உடலிலே—உடலிலே மட்டுமல்ல, நம் வாழ்விலே, ஏராளமாக ஏற்பட்டாக வேண்டும்.

இந்த உண்மையை நாங்கள் நன்றாக அறிவோம். அறிந்த காரணத்தால்தான், தாங்கள் ஓராயிரவரும் சென்ற கிழமை தியாகத் தீயில் குதித்தமைகேட்டு எங்கள் உள்ளம் களிப்பினால் களிநடம் புரிகிறது.

# குன்றத்தூரில் பலமான துப்பாக்கிப் பிரயோகம்!

## ஏழெட்டு 'ரவுண்டு' சுழன்று சுழன்று சுட்டனர்!

## இருவருக்குப் படுகாயம்: பல தோழர்கட்குப் பலத்த அடி!

## ஊரடங்கு சட்டம் அமுல்! அக்கிரமமான தடியடி தர்பார்

சென்னையைக் கடுத்த குன்றத்தூரில், திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அநியாயமாக விதிக்கப்பட்டுள்ள 144 தடை உத்தரவை மீறி, 26-10-50 வியாழன் மாலை பொதுக்கூட்டம் நடத்துவதென்று முன்கூட்டியே ஏற்பாடு செய்திருந்தபடி அந்தக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக சென்னைத் தோழர் என். வி. நடராசன், காஞ்சி கல்யாணசுந்தரம், குன்றத்தூர் பாலகிருஷ்ணன் ஆகியோர் ஒரு டாக்சியில் மாலை 5 மணி சுமாருக்குக் குன்றத்தூர் நோக்கி வந்துகொண்டிருந்தனர். கார், குன்றத்தூருக்கு 2 பர்லாங் தூரத்தில் வந்துகொண்டிருக்கும்போதே, செயின் தாமஸ் மவுண்ட் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், காரை நிறுத்தி மேற்கொண்டு கார் போகக் கூடாது என்று தடுத்துவிட்டு, யார் யார் 144ஐ மீறப்போகிறீர்கள் என்று கேட்டார் நாங்கள் இருவரும் என்று உடனே விடை அளித்த தோழர்கள் 'திராவிடன்' ஆசிரியர் என்.வி, நடராசன், குன்றத்தூர்பாலகிருஷ்ணன் ஆகியோரை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் கைது செய்து பூந்தமல்லி சப் ஜெயிலுக்குக் கொண்டுபோய்விட்டார். இது கண்ட ஏராளமான, பொதுமக்கள் வாழ்க அண்ணா, வாழ்க நடராசன், ஒழிக அடக்குமுறை என்று வீரமுழக்கம் எழுப்பிய வண்ணம் குன்றத்தூரை நோக்கிச் சென்றனர்.

இதே நேரத்தில் ஏறத்தாழ 200 போலீசார் பகல் 1 மணி முதலே குன்றத்தூரில் தர்பார் நடத்திக்கொண்டிருந்தவர்கள் ஒவ்வொரு தெருவிலிருந்தும் மக்களை ஓடிப்போகுமாறு விரட்டியடித்தனர். கடைகளையும் போலீசாரே பலாத்காரமாக மூடினர். மக்களுக்கு ஆத்திரமும் ஆவேசமும் உண்டாகும் முறையில் பொதுமக்களை வேட்டையாடினர்.

அச்சமயத்தில் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் பெரியதோர் ஊர்வலமாகப் புறப்பட்டுக் கூட்டம் நடக்குமிடம் நோக்கிச் செல்ல முயன்றனர். ஊர்வலம் புறப்பட்டுச் சில அடி தூரம் கூட செல்லவில்லை. உடனே ஏராளமான போலீசார், திடுதிப்பென்று கூட்டத்திற் புகுந்து கோரமான தடியடி தர்பார் நடத்தினர். அதுபோது நூற்றுக்கணக்கான தோழர்கள் படுகாயம் அடைந்தனர். அவர்கள் உடலிலிருந்து கொட்டிய குருதி, குன்றத்தூர் மண்ணைத் தழுவிய காட்சி மிகவும் கோரமாக இருந்தது ஊர்வலத்தினர் வைத்திருந்த தி.மு.க. கொடிகளையும் போலீசார் பிடுங்கி எறிந்து அவமானப்படுத்தினர். குன்றத்தூரிலிருந்து வெளியூர்கட்குப் போக பஸ்களில் ஏறிய மக்களை இழுத்துப்போட்டு அடித்தனர். ஒரு டிரைவருக்குப் பலத்த காயம். கண்டக்டருக்கும் நல்ல அடி.

தோழர்கள் குன்றத்தூர் திருநாவுக்கரசு, செல்வராஜ், ஆனகாபுத்தூர் எம். தாமோதரம் மூவரும் கூட்டம் கூடுமிடம் நோக்கிப் புறப்பட, அவர்களும் கைது செய்யப்பட்டனர்.

பொதுமக்கள், போலீசாரின் கொடுமையான தடியடி தர்பாருக்கு ஆளாகியும், மன உறுதி குலையாமல், திரண்டு கூடி, வீரமுழக்கங்களை எழுப்பியபடி இருந்ததுகண்ட போலீசார், திடீரென்று கூட்டத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்யலாயினர் பலருக்குக் குண்டுக் காயம். தோழர் மாங்காடு குட்டிக்கு மாரில் குண்டுக்காயம் வேறொருவருக்கு கால்சதை பிய்த்துக்கொண்டு போய்விட்டது. துப்பாக்கிப் பிரயோகம் ஏழெட்டு 'ரவுண்டு' நடத்தப்பட்டது. விளைவு பயங்கரமானதாக இருந்தது.

அன்று மாலை 5-30 மணி முதல் மறுநாள் காலை 5-30 வரை வீதிகளில் யாரும் நடமாடக்கூடாது என்று ஊரடங்கு சட்டம் (Curfew Order) பிறப்பிக்கப்பட்டுள்ளது.

குன்றத்தூர் சுற்றுவட்டாரமெங்கும் இந்தப் பயங்கர நிகழ்ச்சி பற்றியே பேச்சு.

(19-ம் பக்கத் தொடர்ச்சி)

பின் பிரதிபிம்பமாக இருக்கும் நிலையில், வந்து சேர்ந்தார் ஆச்சாரியார்!

அந்தக் காலத்திலே, காந்தியாரின் அறப்போர் முழக்கம் வெள்ளையர் ஏகாதிபத்யத்தை நடுங்க வைத்த நாட்களிலே, பொது மக்களின் பூமாலைகள் கழுத்தைத் தழுவிக்கொள்ள, பாவாணர்களின் பாசுரங்கள் உள்ளத்தை முத்தமிட, ஆயிரமாயிரம் இளைஞர்களின் பக்திப் பார்வை, அவர் கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தளிக்க அளிக்க, பெருமையுடன்--பூரிப்புடன்— மட்டற்ற மகிழ்ச்சியுடன், ஆச்சாரியார் 'பவனி' வந்த நிலையைக் கண்டிருந்த முதியவர்கள் பலர், இதுபோது இராயப்பேட்டையில், அவர், அனுதைபோலத் தனித்து வந்த காட்சியைக் கண்டதும், அய்யோ பாவம் என்று மனம் கசிந்து கூறலாயினர்.

**மறுபடியும் 34 பேர் கைது !**

ஆச்சாரியார் வருகைக்குச் சிறிது நேரத்திற்கு முன்னதாக, முன்னே கைது செய்யப்பட்ட 17 பேர் தவிர, மேலும் காஞ்சீபுரம் தோழர்கள் வி. பரமசிவம், கே. டி. எஸ். மணி உள்ளிட்ட 34 பேர், தங்கள் கைகளில் கருப்புக்கொடிகள் தாங்கியிருந்தனர் என்ற ஒரு குற்றத்தைத் தவிர வேறு குற்றம் ஏதும் செய்தறியாதவர்கள், போலீசாரால் கைது செய்யப்பட்டனர்.

**அறப்போர்க் களத்தில் பொதுச்செயலாளர் '**

**பொதுச்செயலாளர் அண்ணு** அவர்கள், இச் சமயத்தில், காரில், இராயப்பேட்டைப் பகுதிக்கு வந்து, நிலைமையை நேரில் கண்டும், தோழர்களைக் கண்டு அளவளாவியும், கட்டுப்பாட்டையும் அமைதியையும் கண்ணிமைகள்போலக் காத்திடுமின் என்று வேண்டிக்கொண்டும், அறப்பணி ஆற்றிக்கொண்டிருந்தார்.

இரவு 7 மணி வரை—ஓய்வுசாய்வின்றி, போலீசார், பொதுமக்களைத் தடியடிக்குள்ளாக்கி விரட்டியடித்து, வேட்டையாடியபடி இருந்தனர்.

தமிழ்நாட்டு வரலாற்றிலேயே இவ்வளவு கோரமான தடியடி தர்பார் நடந்தது கிடையாதென்றும், காந்தியாரின் ஏகாதிபத்ய எதிர்ப்புப் போராட்டக் காலத்திலும்கூட, தமிழகம், இத்தகு கோரக் காட்சியைக் கண்டதில்லை என்றும், இந்த நிகழ்ச்சி, ஜலியன் வாலாபாக் சம்பவத்தையே நினைப்பூட்டுகிறதென்றும், முதியவர்கள் பலர் அங்கங்கே பேசியபடி இருந்தனர்.

**தலைவர்கள் விடுதலை**

மறுநாள் காலை, ஈ. வெ. கி. சம்பத், கே. கே. நீலமேகம், என். வி. நடராசன், கே. கோவிந்தசாமி முதலான முற்குறிப்பிட்ட பதினேழு தலைவர்களையும் எத்தகைய நிபந்தனையுமின்றி விடுதலை, செய்தனர். ஆட்சியாளர்கள்.

**எழும்பூர் நீமமன்றத்தில் !**

25-10-50 புதன்கிழமை காலை, எழும்பூரில் உள்ள, மாகாணமுதல்மாஜிஸ்ட்ரேட்முன், மேலே விடுதலை செய்யப்பட்ட தலைவர்கள் போக, மீதம் உள்ள 34பேரையும்தெருவில் போக்குவரத்துக்குத் தடையாக இருந்ததாகக் குற்றஞ்சாட்டி, போலீசார் வழக்குத தொடுத்தனர்.

**சிறை புகுந்தனர் சிங்கஏறுகள்!**

மாஜிஸ்ட்ரேட், வழக்கை நவம்பர் 5—6 தேதிகளுக்கு ஒத்திவைத்துவிட்டு, 34பேரும் சொந்த ஜாமீன் கொடுத்துவிட்டு, வெளியே போகலாம் என்று தெரிவித்நார். அவ்வாறு ஜாமீன்கொடுத்துவிட்டு வெளியேற முடியாது என்று தோழர்கள் அனைவரும் ஒருமனதாகக்கூறிவிடவே, அனைவரையும் ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார் நீதிபதி. தோழர்கள், சிறை வாழ்வை, முகமலர்ச்சியுடன் ஏற்று, போலீஸ் லாரிகளில் ஏறி, சிறைக்கூடத்திற்கான பயணம் தொடங்கினர்!

**ஒன்பது தோழர்கட்கு ஒருவாரக் கடுங்காவல்!**

காலையில், கோட்டை அருகே கைது செய்யப்பட்ட ஒன்பது தோழர்கள்,ஜார்ஜ்டவுன் நான்காவது கோர்ட்டில் நிறுத்தப்பட்டு, நீதிபதியால், தலைக்கு ஏழு ரூபா அபராதம் அல்லதுஒருவாரக் கடுங்காவல் விதிக்கப்பட்டனர்.

---

# தி. மு. க. தோழர்கட்கு !

## முக்கிய வேண்டுகோள்

இதுவரை அமைக்கப்பட்டுள்ள திராவிட முன்னேற்றக் கிளைகள் ஒவ்வொன்றின் நிர்வாகிகளும் அன்பு கூர்ந்து உடனே கீழ்க்கண்ட தகவல்களை எமக்குத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

ஆசிரியர்கள, "**போர்வாள்**"

**தெரிவிக்கவேண்டிய தகவல்கள் :**

1. கிளைக் கழகம் அமைந்துள்ள ஊர்ப் பெயர், ஜில்லாவின் பெயர்.

2. கிளைக் கழகத்தின் இப்போதைய செயலாளர், துணைச் செயலாளர், பொருள் உறுப்பினர், விளம்பர உறுப்பினர் ஆகியோர் பெயர்கள்.

**கடிதம் எழுதவேண்டிய முகவரி :**

போர்வாள் அலுவலகம்—பவழக்காரத் தெரு, சென்னை—1.

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

36. பட்டாளம் ஜி. பாபு
37. அருப்புக்கோட்டை சு. மி. செ. கிருஷ்ணன்
38. என். பொன்னுசாமி
39. விஸ்வம் கோபால், திருவல்லிக்கேணி
40. அயனாவரம் ஜெயவேலு
41. திருவல்லிக்கேணி நீல. நாராயணன்
42. வண்ணை திருநாவுக்கரசு
43. திருவல்லிக்கேணி செந்தாமரை
44. சூளை சோலை
45. வண்ணை முருகேசன்
46. 14-வது வட்டம் ஏகாம்பரம்
47. டி. வடிவேலு
48. இராயபுரம் வி. டி. சந்திரசேகரன்
49. மூலக்கொத்தளம் எஸ். எம். ஆநந்தன்
50. சிதம்பரனார் நகர் பாரதிதான் படிப்பகம் கமலகண்ணன்
51. ,, க. மதியழகன்
52. ,, ஆ. மணிவண்ணன்
53. ,, கலைச் செல்வன்
54. ,, சே. அ. மதியழகன், ஒற்றைவாடை
55. எம். எஸ். எம். மொகையதீன்
56. காஞ்சி நகராட்சி உறுப்பினர் சி. வி. ராஜகோபால்
57. சி. வி. ராஜன், சென்னை மாவட்ட தி. மு. க. பொருள் உறுப்பினர்
58. சபாபதி, காஞ்சீபுரம்
59. முனிசாமி, சென்னை நகராட்சிமன்ற உறுப்பினர்
60. கே. எம். கண்ணபிரான், சென்னை மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர்
61. திருவல்லிக்கேணி வேலப்பன்
62. காஞ்சீபுரம் பெருமாள்
63. மதுரை எஸ். சுப்பையா
64. டி. குப்புசாமி
65. ஏ. எம். மணி
66. இராகவன்
67. சென்னை 10-வது வட்டம் விஜயரங்கம்
68. ,, ,, சேஷாசலம்
69. ,, ,, மோகன ரங்கம்
70. ,, ,, திருவேங்கடம்
71. ,, ,, சடகோபன்

---

8-ம் பக்கத் தொடர்ச்சி

வந்தது, அதனுடன் நான் இழுத்துச் செல்லப்பட்டேன். இங்கேயும் நான் பின்னணியானேன். கூட்டத்தைப் பக்க வழிகளில் பிரிந்து செல்லாமல் போலீஸ் மடக்கியது. ஒரு சிறு நடைபாதை வழியாகக் கூட்டம் முழுவதும் மடக்கப்பட்டு, கூட்டம், சிறு சிறு பிரிவுகளாகப் பிளக்கப்பட்டு, தனித்தனி, நொறுக்கப் பட்டது. பலர், முள்வேலி யேறி ஓடினர். அவர்கள், போலீசின் கருணையை விட, முள் வேலியின் கருணையும், ஓடிவரும் ரயிலின் கருணையும் மேல் என் எண்ணி, முள்வேலி மீது ஏறி ஓடினர் போலும். முள்வேலி ஒரு சிலரைத்தான் கிழித்தது. ஓடும் ரயில்கூட, அது, நீராவியுள்ளம் படைத்திருந்ததனால், மக்கள் மீது ஏறாமல் நின்று விட்டது. ஆனால் என்னால் ஓடமுடியவில்லை, பேனா ஓட்டத் தெரிந்த என் கைகளுக்கும், மயிரிழை பிளக்கத் தெரிந்த என் மூளைக்கும், ஓடத் தெரிந்த கால்களின் துணை இல்லை, ஒருகால் ஊன்ற முடியவில்லை, இந் நிலையிலும், என்மீது அடி விழுந்தது. என்னை முன்வந்து அடித்தவனை. நீ என்னடா மெல்ல அடிக்கிறாய் என்று கூறி, அடுத்திருந்த வேறொருவர், ஓங்கி அடித்தார். தோழர் அப்பாதுரை என்னும் காரணத்தால் மட்டுமன்று, எழுத்தாளர் அப்பாதுரை என்னும் காரணம் கொண்டும் தான் என்னைத் தாக்குகிறார்கள் என்ற எண்ணம் எனக்கு எழுந்தது. எழுந்ததும், எனக்கும ஓடவேண்டும் என்ற துணிவு பிறந்து ஓடலானேன். சென்ரல் ஸ்டேஷன் வருமுன்னால், சக்தி முற்றும் இழந்தேன். தோழர் என். வி. நடராசன் அவர்களுடன் ஒரு கும்பல், ஜெனரல் ஆஸ்பத்திரியின் ஓரத்தில் நிற்பது கண்டு, என்னை ரிக்ஷாவில் ஏற்றி வீடனுப்புமாறு கேட்டுக் கொண்டேன். இரு தோழியருடன் தாக்குதலிற் கலந்து, தடியடியால் மருண்டு கலங்கிய ஓர் எட்டு வயது சிறுமியை மட்டும் என்னுடன் சேர்த்துக் கொண்டு, நான் திருவல்லிக்கேணியில் உள்ள என் வீடு வந்து சேர்ந்தேன்.

தமிழ் நாட்டில் இந்தியைப் பரப்பி, அத்துடன் தமிழ்ப் பற்றையும் வளர்க்கப் பாடுபட்ட, எனக்கு இந்தி எதிர்ப்பாளர் ஆதரவன்றி வேறு ஆதரவு இல்லாமற் போய், ஆட்சியாளர் வெறுப்பும் வந்து சேரும் என்று, இந்தியை வளர்க்க நான் பாடுபட்ட அந்தக்காலத்தில் எண்ணியதில்லை; ஆனால் சில காலத்திற்கு முன்னரே அதை நான் உணர்ந்து கொண்டேன். இந்தி ஆதரவாளரின் கை வலிமையைக் காணவேண்டி நேரிடும் என்பதும் நன்கு தெரிந்தே இருந்தது. ஆனால், தனிப்பட, நான் தாக்கப் படக் கூடும் என்று நான் எண்ணியதில்லை. ஆயினும், தனிப்பட நிறுத்தித் தாக்கப்பட்டவன் நான் மட்டும் அல்லன், இயக்கப் பிரமுகரும் ஆதரவாளருமாகிய பலரும், அங்ஙனமே, தனித்தனியே அடையாளம் கண்டுபிடிக்கப்பட்டு தாக்கப் பட்டனர் என்று பின்னர் கேள்விப்பட்டேன். அத்துடன், திராவிட இயக்கத்தை மட்டுமன்றி, அந்த இயக்கத்தை ஆதரித்துநிற்பவரையும், அவர்களைத் தம் நாட்டு மக்கள் என்று எண்ணுபவரையும் கூட, அடியோடு வெறுத்து ஒதுக்கித் தண்டிக்கவேண்டும் என்னும் வெல்லிங்டன் — டயர் மனப்பான்மை, காங்கிரஸ்—கதர்ப் போர்வைக்குள் புகுந்து கொண்டிருப்பதையும் உணர்கிறேன். இந்த மனப்பான்மையின் விளைவு என்ன ஆகும்?............

# பேச்சுரிமையை நிலைநாட்ட அறப்போர்!

—x—

## எழுத்துரிமை காக்கவும் தீர்மானம்!

—(:)—

### தடை செய்யப்பட்ட நாடகங்களை நடத்த முடிவு.

### தி. மு. க. மத்திய கமிட்டி கூடியது

★

23-10-50 திங்கள் இரவு 9 மணிக்கு சென்னை தங்கசாலைத் தெரு 202-ம் எண்ணுள்ள தி. மு. க. தலைமை நிலைய அலுவலகத்தில், தி. மு. க. தலைமைக் கழகச் செயற்குழுக் கூட்டம் கூடியது.

அவ்வமயம் கீழ்க்கண்ட உறுப்பினர்கள் வந்திருந்தனர்:—

1. சி. என். அண்ணாதுரை பொதுச் செயலாளர்
2. குறிஞ்சிப்பாடி சாம்பசிவம்
3. சென்னை என். வி. நடராசன்
4. கோயில்பட்டி வள்ளிமுத்து
5. மதுரை எஸ். முத்து
6. பெ. மா. அப்பாதுரை
7. அம்பில் தர்மலிங்கம்
8. ஜீ. பி. சோமசுந்தரம்
9. ஈ. வெ கி. சம்பத்
10. கே. எம். கண்ணபிரான்
11. எம். எஸ் எம். முகைதீன்
12. சத்தியவாணிமுத்து
13. எம். பி. வடிவேலு
14. குமார தணிகாசலம்
15. காஞ்சி மணிமொழியார்
16. இரா நெடுஞ்செழியன்
17. டி. எம். பார்த்தசாரதி
18. கே. ஏ. மதியழகன்

நீண்ட நேர ஆலோசனைக்குப் பிறகு, கீழ்க்கண்ட இரு தீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

1 (அ) திராவிட முன்னேற்றக்கழகக் கூட்டங்களுக்கோ, அல்லது தனிப்பட்ட முறையில் குறிப்பிட்டு திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்களுக்கோ கி. பி. கோ. 144வது தடை உத்தரவு அல்லது, சென்னையில் சிடி போலீஸ் ஆக்ட்படி தடை உத்தரவு, பேச்சுரிமையைப் பறிக்கும் விதத்தில் அரசியலாரால் பிறப்பிக்கப்படுமானால் அந்தத் தடை உத்தரவுகளை மீறி, பேச்சுரிமையை நிலைநாட்ட வேண்டும் என்று இக்கூட்டம் முடிவுசெய்கிறது.

(ஆ) மேற்படி தடை உத்தரவை மீறுவதற்குத் தலைமை நிலையத்தின் முன் அனுமதிபெறத் தேவையில்லை என்று எல்லாக் கிளைக் கழகங்களுக்கும், இக்கூட்டம் அறிவித்துக் கொள்கிறது.

2 தடை செய்யப்பட்ட நாடகங்களை மீறி நடத்த ஒவ்வொரு மாவட்டமும் திட்டம் வகுத்து நடிகர் குழு அமைத்து, தலைமை நிலையத்துக்கு நவம்பர் இறுதிக்குள் தெரியப்படுத்த வேண்டுமென்று இச்செயற் குழு, மாவட்ட தி. மு கழகச் செயலாளர்களைக் கேட்டுக்கொள்கிறது.

பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள் பேசுகையில், இரயில்வே நிலையங்களில் உள்ள இந்திப் பெயர் முதலில் எழுதப்பட்ட பலகைகளை மாற்றித் தமிழ்ப் பெயரை முதலில் வைத்து எழுதவேண்டுமென்று, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு, கோயில்பட்டி தீர்மானப்படி, தான், கடிதம் தீட்டியிருப்பதாகவும், அதற்கு இதுவரை விடை கிடைக்கவில்லையென்றும், கிடைத்ததும், விடை நமக்குத் திருப்தி அளிக்கத்தக்கதாக இல்லாவிட்டால், அறப்போர் தொடங்கப்படுமென்றும் குறிப்பிட்டார்.

தி. மு. க. நடைமுறைத் திட்டங்கள் குறித்தும், எதிர்கால ஆக்கவேலைகள் குறித்தும், மாகாண மாநாடு கூட்டுவது குறித்தும் கலந்தாலோசிக்கப்பட்டது. அநேகமாக ஜனவரி மாதத்தில் மாகாண மாநாட்டைக் கூட்டவேண்டியிருக்கும் என்றும், இன்னும் ஜில்லா மாநாட்டை நடத்தாதிருக்கிற தோழர்கள் விரைவில் அந்தப் பணியை முடித்துவிட்டால் மாகாண மாநாட்டை நடத்துவதுஎளிதாகுமென்றும்அண்ணா அவர்கள் எடுத்துக் காட்டினார்கள்.

வேறு பல முக்கிய பொருள்கள்பற்றி ஆலோசனை நிகழ்த்தப்பட்டு, கூட்டம் முடிவுற்றது.

**அக்டோபர் 24**

# நான் கண்ட காட்சி!

[கா. அப்பாதுரை எம். ஏ. (ஆங்கிலம்)
எம். ஏ (தமிழ்) விசாரத் (இந்தி)]

24-10-50! காங்கிரஸ் வெல்லிங்டன் ஆட்சியின் கருணை வெள்ளம், தமிழ்நாட்டுத் "தவப்புதல்வர்" சக்கிரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரைக் கறுப்புக் கொடியினால் தாக்கப்படாமல் காக்க முனைந்து, போலீஸ்காரின் மனித உள்ளமாகிய மடைகளை உடைத்துத் திறந்து கொண்டு, சென்னை மக்கள்மீது தாராளமாகப் பாய்ச்சப்பட்ட நாள்! எல்லா இயக்க மேடைகளிலும் கலந்து, தமிழ்ப் பணியிலும் மக்கட் பணியிலும் நாட்டு மக்களை ஊக்கி வந்த நாட்டுப் பற்றாளனாகிய எனக்கும் அந்த வெள்ளத்தில் நீந்தும் பேறு சிறிது கிட்டியது. அதில் சில தனிச் சிறப்புகளும் கிடைத்தன. **எந்தத் தமிழாசிரியருக்கும் உள்ளத்திலும் வயிற்றிலும் கிடைக்கும் தழும்புகள் எனக்குக் கையிலும் முதுகிலும் பிடரியிலும் கிடைத்தன.** பரிசு இன்று சிறியதாயினும், அது ஒரு நல்ல வருங்கால அறிகுறி. நான் தமிழாசிரியனாக மட்டுமன்றி, ஆங்கில ஆசிரியனாகவும், காந்தி ஆசிரமங்களில் தலைமை ஆசிரியனாகவும், இந்தி ஆசிரியனாகவும் பல ஆண்டுகள் தொண்டாற்றியவன். மேலும், காங்கிரஸ் சோஷலிஸ்ட் கம்யூனிஸ்ட் முதலிய பல இயக்கங்களுக்கு ஆதரவானவையும, கல்விச் சார்பானவையும், இலக்கிய அறிவுச் சார்பானவையும் ஆகிய அறுபதுக்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியன். எனவே இத்தனை துறையாளருக்கும் நான் பெற்ற பரிசில், பங்குபெற உரிமை உண்டு.

காலை 7 மணியிலிருந்து கோட்டைப் பகுதியில் திரண்டு, கறுப்புக் கொடி தாங்கிநின்ற கூட்டத்தில் நானும் ஒருவன். அறிஞர் அண்ணாவின் சொல்லாணையைச் செயலாணையாக்க, மக்களை அமைதியுடன் நிறுத்திவைத்துக், கறுப்புக் கொடி காட்டவைக்கும் பணியில் பிற தொண்டருடன் தொண்டனாக நானும், பெண் தொண்டருடன் தொண்டராக என் மனைவியும் நின்றிருந்தோம். ஒரு நாட்டுப் படையை, இடுக்கிப் போர்முறைப்படி தாக்கும் எதிரிப் படைவீரர் போல, போலீசார், நம் கூட்டத்தை, நாற்புறங்களிலும் பரவி நிற்கும்படி கோரி, அங்ஙனம் நாம் நின்றவுடன், பல கிளை அணிகளாகப் பிரிந்து சென்று, பிரித்து வளைத்துப் பல தனித்தனிப் போர்க் களங்களை உண்டுபண்ணினர். முதல் தொண்டர் பிரிவு, ஒரு கணத்தில் மாயமாக்கப் பட்டது. இரண்டாம் பிரிவு, அடித்து நொறுக்கித் தெற்கு நோக்கித் தள்ளப் பட்டது. தடியடித் தாக்குதல், பின்னணியில் இருந்த பொதுமக்களின் முதுகுப் புறங்களையே குறிப்பாகக் கொண்டு நிகழ்த்தப் பட்டது. இயக்கச் சார்பானவரும், அல்லாதவரும் ஆகிய பொதுமக்களை அமைதிப் படுத்தும் நோக்கத்துடன், நான் பின்னணியின் பின் சென்றேன். சென்று, போலீசாரைச் சற்று தணிந்து போகும்படி வேண்டினேன். மனித உணர்ச்சி முற்றிலும் கெடாத போலீசார் நான் மக்கள் தொண்டன் என்ற எண்ணத்தால் என்னையும் தாக்காமல், பொதுமக்கள் முதுகை நோக்கி ஓங்கிய அடிகளையும் ஓரளவு விலக்கி, பொதுமக்களை விரட்டும் பணியை மட்டும் முன்னிலும் விரைவாகச் செய்யலாயினர். அதைக் கண்ட வெள்ளையர் உடைதரித்த ஒருவர் (இவர் அசிஸ்டென்ட் கமிஷனர் என்பது பின்னரே எனக்குத் தெரியவந்தது) சில உயர்தரப் புலிகளுடன் பாய்ந்து வந்து, கூட்டத்திலிருந்து என்னைப் பிரித்து வளைத்துத் தாக்கினார். என்னுடன் சாய்ந்த கூட்டப் பிரிவும் அடித்துத் துவைக்கப் பட்டது. முதலடி பிடரியில் பட்டதால் அரைஉணர்வுடன் ஓடினேன். புலிகளால் வளைக்கப் பட்ட புள்ளிமான்போல கூட்டத்தை விட்டு விலகி நடுவெட்ட வெளியில் ஓடினேன். எங்கோ ஓர் இடத்தில் என்மீது அடி விழுந்தது. விழுந்ததும் கீழே விழுந்தேன். ஒரு கையும் ஒரு காலும் செயல் அற்றுப்போயின. எழுந்து தப்ப முயன்றால் முடியவில்லை, "எழுந்து ஓடு! எழுந்து ஓடு!" என்று முதுகில் அடிகள் விழுந்த வண்ணமிருந்தன. அடிப்பவர், வெல்லிங்டன் இனம் என்று நினைத்த நான், வெல்லிங்டன் மொழியிலேயே (ஆங்கில மொழியிலேயே), "நான்பலமின்றி இருக்கிறேன்; என்னால் நிற்கக்கூட முடியாது," (I am weak : I cannot even stand) என்றேன். வெள்ளையர் போலத் தோற்றமளித்த அப் போலீஸ் அதிகாரி, விரைந்தோடி வந்து, என்னைத் தாக்கிக் கொண்டே, டயர் மொழியில், "உன்னை நான் அறிவேன், போக்கிரி! நீ யார் என்றும் அறிவேன்! எழுந்து நடந்துதான் நீ அகலவேண்டும்" (I know you, rogue! I know who you are. You will have to walk) என்று கூறினார். பக்கத்தில் ஆழமான பள்ளம். அதில் விழுந்து விடுவேனோ என்று அஞ்சினேன். அஞ்சியும் சிந்தனையின்றி எழுந்தேன். போலீசாரே தாங்கினார்கள். ஆனால் மீண்டும் அடிகள்!

இச் சமயம் ஒரு காரிலிருந்து சிலர் இறங்கினர். என்னை அவர்கள் இழுத்துச் சென்று காரில் ஏற்றினர். சிறிது நேர ஓய்வு கிட்டியது. காரில் இடம் குறைவானதால், என் மனைவியும் இன்னொரு தோழியரும் இறங்கிவிட்டார்கள். கார் சிறிது தூரம் சென்றது. அதற்குள், காலில் அடிபட்ட, மூன்றாம் பிரிவைச் சேர்ந்த நம் தோழர் ஒருவர் கொண்டு வரப் பட்டார். நடக்க முடியாத நிலையில் இருந்தேன் என்றாலும், அத் தோழருக்கு இடம்தர நான் இறங்க வேண்டி வந்தது.

கோட்டை, அன்று, ஒரு பெரும் போர்க்களம். நான் இருந்த இடம், அதில், போலீசால் வளைக்கப்பட்ட ஓர் அகன்ற சேலம் சிறை. எனக்கோ நடக்க முடியவில்லை. மெல்ல மெல்ல அடியெடுத்து வைத்து நகன்றேன். இதற்குள், நான்காம் பிரிவு, போலீசால் தாக்குண்டு, என்னை நோக்கி ஓடி

(6-ம் பக்கம் பார்க்க)

# தடியடிபட்டு இரத்தம் சிந்திய வீரத் தியாகிகளே!

24-10-50 செவ்வாயன்று, ஆச்சாரியார் சென்னை வந்தபோது, அவர் கண்ணில் கருப்புக்கொடி படக்கூடாது என்பதற்காக, கருப்புக்கொடி காட்ட வந்திருந்த பல்லாயிரக் கணக்கான திராவிடர்மீது, சென்னை சர்க்கார், தம் போலீசாரை விட்டு, அக்கிரமமான முறையில் தடியடிப் பிரயோகம் செய்தனர். அதுபோது, ஆயிரம் பேருக்கு மேற்பட்ட திராவிடர்கள், கோரமான தடியடிக்கு உள்ளாகி, கைகால் முறிந்து, உடல் நொறுங்கி, குருதி சிந்தியிருக்கின்றனர். திராவிடத் தனியரசு அமைப்பதற்காகத் தரப்படவேண்டிய மகத்தான விலையின் முதல் பகுதிதான், அவர்கள் சிந்திய இரத்தம். சென்னை மண்ணில் அவர்கள் கொட்டிய குருதி வீண் போகாது.

அந்த ஆயிரம் அறப்போர் வீரர்களில் இதுவரை நமக்குக் கிடைத்துள்ள தோழர்களின் பெயர்ப்பட்டியல் வருமாறு:—

1. தோழியர் ஏ. பி. செல்லக்கண்ணம்மாள்
2. ,, ஞானதனம்மாள்
3. ,, அலர்மேல் அப்பாதுரை அம்மையார்
4. தோழர்கள் புலவர் கா. அப்பாதுரை எம். ஏ. எல். டி
5. ,, டாக்டர் கணேசன்
6. ,, முல்லைக்கொம்மை வடிவேலு
7. ,, கொண்டித்தோப்பு அ. மு. மணி
8. ,, ராயப்பேட்டை ப சண்முகம்
9. ,, ராயப்பேட்டை கே. இராகவன்
10. ,, பெரியமெட் ஏ. சொக்கலிங்கம்
11. ,, ராயபுரம் எஸ். சிங்கராஜ்
12. ,, கந்தசாமி கோயில் தெரு குப்புசாமி
18. ,, சேப்பாக்கம் இரா. நடேசன்
14. ,, மண்ணடி ஷரீப்
15. ,, ,, எம். ஏ, ரசாக்
16. ,, வேப்பேரி எம். ஏ. ஜார்ஜ்
17. ,, முத்தியாலுப்பேட்டை ஜி. எஸ். ராதாகிருஷ்ணன்
18. ,, ,, இரா. சண்முகம்
19. ,, ,, ஜி. சாரங்கன்
20. ,, ,, ஏ. எம். சம்பந்தம்
21. ,, ,, என். நெடுமாறன்
22. ,, சீனிவாசன், வண்ணாரப்பேட்டை
23. ,, இளவரசன், புளியந்தோப்பு
24. ,, தண்டாயுதபாணி, அமிஞ்சிகரை
25. ,, என். சி. கேசவராமன், நுங்கம்பாக்கம்
26. ,, கே. ராமதாஸ், பெரம்பூர்
27. பெரம்பூர் எஸ். சி. பாபு
28. ஓட்டேரி ஏ. எஸ். சம்பத் குமார்
29. ,, முருகேசன்
30. ,, பாலகிருஷ்ணன்
31. ,, தாமோதரன்
32. ,, நடராசன்
33. ,, லோகரட்சகன்
34. ,, துரைராஜ்
35. இளையகோட்டை கரிகாலன்

(6-ம் பக்கம் பார்க்க)

## திராவிடப் பெருங்குடி மக்கள் நாங்கள் ஐந்து கோடியினரும் உங்கட்கு வணக்கம் செலுத்துகிறோம்

# ★ இலட்சிய வெற்றிக்கான அச்சாரம்: பச்சை ரத்தம் பரிமாறினர் திராவிடர்! ★

# சென்னையில் ஜலியன் வாலாபாக்: மிகக் கொடிய தடியடி தர்பார்!

## ஆணவம் மி[illegible] ஆட்சியாளர்தம் அக்கிரமமிகு நடத்தை!

## 1000 பேருக்குப் படுகாயம்: 60 பேர் கைது!

### சம்பத், நடராசன், கே. ஆர். நூர், நீலமேகம், கோவிந்தசாமி மற்றும் பலர் 'அரெஸ்ட்!'

**என்றென்றும் மறக்கமுடியாது!**

24—10—50 செவ்வாய்க்கிழமை! அந்த நாளை, ஆச்சாரியார் என்றென்றும் மறக்க முடியாது; சென்னை ஆட்சியாளர்களும் மறக்க முடியாது; சென்னை ஆட்சியாளர்களைத் தன் உள்ளங் கையில் நிற்கவைத்து, தன் மனம்போனபடி ஆட்டிப் படைக்கும் வடநாட்டு ஏகாதிபத்யமும் மறக்கமுடியாது; அந்த ஏகாதிபத்யத்தின் ஆணவ அடக்குமுறை ஆட்சி உள்ளவரையில் தனக்கு ஏகபோக வாழ்வு உண்டு என்றெண்ணி இறுமாந்துகிடக்கும் தென்னாட்டு ஆரிய வட்டாரமும் மறக்க முடியாது; வீரத் திராவிடரும் மறக்க மாட்டார்கள்; திராவிடநாட்டு வரலாறும் மறவாது.

அந்த நாளை நினைத்துப் பார்க்கும் நேரத்தில் எல்லாம், இனி, ஆச்சாரியார் உள்ளம், "தம் இலட்சிய வெற்றிக்காகப் பச்சை ரத்தம் பரிமாறவும் தயாராகிவிட்டார்கள் வீரத் திராவிடர்கள்! இனி, அந்த சேரன் செங்குட்டுவன் பரம்பரையிடம் நம் வேத வியாசர் பரம்பரை வாலாட்ட முடியாது! தீர்ந்தது நம் வாழ்வு—தொலைந்தது நம் ஆதிக்கம்" என்று எண்ணி, அஞ்சி நடுங்காமல் இருக்க முடியாது.

அதுபோலவே, அந்தத் தினத்தை எண்ணிப் பார்க்கும் சமயத்தில் எல்லாம், வடநாட்டு ஏகாதிபத்யத் தலைவர்கள், "இமயத்தில் புலிக் கொடி நாட்டிய கரிகால் வளவனின் கால்வழியினரைக் கிள்ளுக்கீரைகளென இதுவரை எண்ணினோமே! என்ன மடமை! என்ன பேதமை! கிள்ளுக்கீரைகள் அல்லர் அவர்கள்! வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாட்டும் தோள்கள் எங்கள் வீரத் தோள்கள் என்று இடிமுழக்கம் புரியும் தென்னாட்டு வேங்கைகள்! நடமாடும் சேரன் செங்குட்டுவன்கள்! இனி அவர்களை அடக்கமுடியாது, முடியாது, ஒருக்காலும் முடியாது!" என்று சொல்லிச் சொல்லிப் பெருமூச்சு விடுவது நிச்சயம்.

அதுபோலவே, 24-10-50 என்ற சொற்கள், இனி, சென்னை ஆட்சியாளர்தம் செவியில் விழுகிற நேரத்தில் எல்லாம், அவர்கள், "கொடுந்தடியால் அடிபட்டு, உடல் நொறுங்கி, குருதி, ஆறெனஓடுகிற நேரத்திலும் அல்லவோ, இந்த இலட்சியவாதிகள் திராவிடநாடு திராவிடருக்கே என்று ஓங்கி முழங்குகிறார்கள்! சீறியெழும் இந்தச் சண்டமாருதத்தை அடக்குமுறை என்னும் நம் சிறுதடி அடக்கிவிடும் என்று மனப்பால் குடித்தோமே-என்ன மதியீனமான எண்ணம் அது!" என்று நினைத்து, தமக்குள் தாமே வெட்கமடைந்து, உடல் குறுகி, உள்ளம் வெந்து, ஒடுங்குவது உறுதி.

ஆனால் அதே நேரத்தில், திராவிட இளஞ்சிங்கங்கள்—தென்னாடு பெற்ற பொன்னார் மேனியர்கள்—பர்மாவை வென்றாண்ட போர்ப்புலி ராஜேந்திரனை தம் மூதாதையராகக் கொண்டவர்கள்—ஆம்! அறப்போர் அண்ணல் திருவள்ளுவரை உலகுக்கு ஈந்த வீர இனத்தவர்கள், 24—10—50 என்ற சொற்றொடரைக் கேள்விப்படுகிறபோதெல்லாம், இனி, பூரிப்புடன், பெருமையுடன், மட்டற்ற மகிழ்ச்சியுடன், தலைநிமிர்ந்து நிற்பர்—நிச்சயம்.

**வேலையில்லா அமைச்சர் செய்துவரும் வேலை!**

அன்று காலை 9-30 மணிக்கு, வடநாட்டு ஏகாதிபத்யத்தின் செல்லப் பிள்ளையாக இருந்து, தென்னாட்டவர் நன்மைகளைக் காட்டிக் கொடுக்கும் "திருப்பணி" புரிவதையே தன் வேலையாகக் கொண்டிருக்கும் வேலையில்லா அமைச்சர் ஆச்சாரியார் சென்னைக்குள் நுழைந்தார்!

**குருதி வெள்ளத்தின் மீது நீந்தி வந்தது மோட்டார்!**

ஆனால் அப்படி அவர் நுழைவதற்கு முன்னால், வடநாட்டு ஆதிக்கம், சென்னைப் போலீசார் உருவத்தில் 'விஸ்வரூபம்' எடுத்து, ஆயிரமாயிரம் திராவிடர்களை அக்கிரமமான முறையில் தடியால் அடித்து, ஓராயிரம் பேரைப் படுகாயத்துக்குள்ளாக்கி, சில பலரை உயிருக்கே ஊசலாடும் நிலையில் நிறுத்தி, சென்னைத் தெருக்களிலே, செந்தமிழர் குருதியை, ஈவுஇரக்கமின்றி, ஆறெனஓட வைத்துவிட்டது! அந்தக் குருதி வெள்ளத்தின் மீது நீந்தியபடிதான், ஆச்சாரியாரின் கார். அன்று காலை, சென்னை கோட்டை ரயில்நிலையத்திற்கருகில் உள்ள ஒய். எம். சி. ஏ. சிறுவர் நகரம் என்ற பகுதிக்கு வரமுடிந்தது.

ஒடிந்த கரங்கள், முறிந்த கால்கள், குருதியைக் கொட்டியபடி இருக்கும் முதுகுகள், இரத்தத்திலே மிதந்து கொண்டிருக்கும் உடல்கள், அறுந்துவிழும் தசைகள். நொறுங்கிய எலும்புகள், ஆஸ்பத்திரியிலே பிணம் எனும் நிலையில் பலர்—இந்தத் திருக்காட்சிதான் ஆச்சாரியாரை வரவேற்றது. ஜே கோஷமல்ல! பாரதபுத்திரர்களின் வரவேற்புத் தாள்களல்ல!

தான்—ஒரு மந்திரி—இத்தனை ஆயிரம்பேரை படுகாயத்திற்கு உள்ளாக்கிவிட்டுத்தான் சென்னைக்குள்—திராவிடநாட்டுக்குள் நுழைய முடிகிறது என்பதை நினைத்தபோது, ஆச்சாரியார், என்னென்ன எண்ணியிருப்பாரோ யார் கூற முடியும்?

ஆனால் ஒன்றைமட்டும் உறுதியாகக் கூறமுடியும். தான் வந்த வழி திராவிடர்தம் இரத்தத்தால் மெழுகப்பட்டிருக்கிறது என்பதை நேரில் கண்டபோது, அவருடைய அந்த இரு கண்கள், இரண்டு சொட்டு நீரையாவது சிந்தித்தான் இருக்கும்—அந்தக் கண்களுக்கு, இயல்பாக இருக்கவேண்டிய மனிதப் பண்பு தன் கடமையைச் செய்திருந்தால்!

**கடல் அலைபோல் கூட்டம்!**

வடநாட்டு ஆதிபத்யத்தின் சின்னம் பண்டித நேருவின் படம்திறக்க, தென்னாட்டுத் தோழர் ஆச்சாரியார், காலை 9-30 மணிக்குத்தான் வருகிறார் என்று தெரிந்திருந்தும், காலை 6 மணி முதலே, திராவிடத் தோழர்கள், சென்னையின் நாலாபுறங்களிலிருந்து, கடல் அலைத்திரள்போல, அடுக்கடுக்காக, அடுக்கடுக்காக, கோட்டை ரயிலடி நோக்கி, வந்து குவிந்தபடி இருந்தனர்.

வாலிப வீரர்கள்
வீரத் தாய்மார்கள்
கல்லூரிக் காளைகள்
பள்ளி மாணவர்கள்
சர்க்கார் உத்தியோகஸ்தர்கள்
பாட்டாளிகள் பட்டாளம்
வியாபாரிகள் கூட்டம்
தமிழ்ப் புலவர்கள்
பள்ளி ஆசிரியர்கள்

ஆகிய பல திறத்தாரும், ஆயிரமாயிரமாகத் திரண்டு, பெருவெள்ளம்போல் வந்து கூடினர். திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களும் பேச்சாளர்களும் எழுத்தாளர்களும் செயல் வீரர் கூட்டமும் அணி அணியாக வந்து நிரம்பினர். அதற்கு முந்தியநாள், சென்னையில் நடைபெற்ற, திராவிட முன்னேற்றக்கழக மத்திய செயற்குழுக் கூட்டத்திற்கு வந்திருந்த தலைவர்கள் அனைவரும், ஒருவர்விடாமல், வந்து குழுமியிருந்தனர்.

**தமிழகம் எங்குமிருந்து திரண்டு வந்தனர் திராவிடத் தீரர்கள்!**

சென்னைத் திராவிடர்கள் மட்டுமேயன்றி, வெளியூர்த் தோழர்களும் ஏராளமாகக் காணப்பட்டனர். குறிப்பாக, செங்கற்பட்டு, தென்னார்க்காடு, வடார்க்காடு, திருச்சினாப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களிலிருந்து வந்த நூற்றுக் கணக்கான தோழர்களை அங்குப் பார்க்க முடிந்தது.

முன்னேற்றக் கழகத் தோழர்கள் மட்டு மன்றி,

# அலை அலையாகத் திரண்டுவந்தனர் ஆற்றல் மிகு திராவிடர்!

திராவிடக்கழகம், சோஷியலிட்கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, காங்கிரஸ் கட்சி, தொழிற் சங்கங்கள் ஆகிய பல்வேறு கட்சிகளைச் சார்ந்தவர்களும் அந்த வரலாற்று நிகழ்ச்சியில் வந்து கலந்து கொண்டது பெரிதும் பாராட்டத் தக்கது.

எந்தக் கட்சியையும் சேராத பொதுமக்களும் ஏராளமாக வந்து குழுமியிருந்தனர்.

**வந்த வீரர்களிற் சிலர்!**

தோழியர்கள் சத்தியவாணிமுத்து அம்மையார், டாக்டர் தருமாம்பாள், அலர்மேலு அப்பாதுரை அம்மையார், ஏ. பி. செல்வக்கண்ணம்மையார், சூளை தனம்மாள், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழகன், என். வி. நடராசன், கோயிலபட்டி வள்ளிமுத்து, குறிஞ்சிப்பாடி சாம்பசிவம், மதுரை எஸ். முத்து, திருச்சி அம்பில் தர்மலிங்கம், பேளுக்குறிச்சி சோமசுந்தரம், பெ. ம. அப்பாதுரை, முல்லைக் கொம்மை வடிவேலு, கள்ளக்குறிச்சி குமார தணிகாசலம், எம். எஸ். எம். மொகைதீன், சென்னை மாவட்ட தி. மு. க. செயலாளர் கே. கோவிந்தசாமி, சி. வி. ராஜன், டி. எம். பார்த்தசாரதி, காஞ்சி மணிமொழியார், ஆர். அங்கமுத்து, டாக்டர் கணேசன், சென்னை நகராட்சிக் கழக உறுப்பினர் வி. முனுசாமி, சென்னை மாவட்ட தி. மு. க. துணைச் செயலாளர்கள் கே. எம். கண்ணபிரான் —ஏ. கே. சாமி, "திராவிடநாடு" துணையாசிரியர் இராம அரங்கண்ணல், தில்லை வில்லாளன், ஈழத்தடிகள், சென்னை சேஷாசலம், காஞ்சி சி. வி. எம். அண்ணாமலை, திருவத்திபுரம் புலவர் கோவிந்தன் பி. ஓ. எல்., நுங்கம்பாக்கம் பாலசுந்தரம், 'தீ' ஆசிரியர் பத்மன் செல்லப்பன், போளூர் சுப்ரமண்யம், ஜலகண்டபுரம் ப. கண்ணன், நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி, பன்மொழிப்புலவர் க அப்பாதுரை எம். ஏ. எல். டி. புலவர் மயிலை சிவ. முத்துக்குமாரசாமி, திருஒற்றியூர் டி. சண்முகம், கே. கே. நீலமேகம், கவிஞர் கண்ணதாசன், காஞ்சி சுந்தரேசன், மணி, சபாபதி, காஞ்சி நகராட்சிக் கழக உறுப்பினர் சி. வி ராஜகோபால், வாலாஜாபாத் தேவராஜ், மா. இளஞ்செழியன் ஆகியோர் வந்திருந்த தோழர்களில் குறிப்பிடத்தக்க சிலராவர். (இன்னும் பல தோழர்கள் பெயர் கிடைக்கவில்லை.)

**அறிஞர் அண்ணா அறிவுரை**

பொதுச் செயலாளர் அண்ணா அவர்கள், தலைமை நிலையத்திலிருந்து புறப்பட்ட தோழர்களை, பொறுமையாகவும் கட்டுப்பாடாகவும் அமைதியாகவும் இருந்து கடமையாற்றுங்கள், எத்தகு ஆபத்து வரினும் அஞ்சாதீர்கள், சங்கத் தமிழரின் வழிவழி வந்த வண்டமிழ் மரபினர் என்பதை உங்கள் செயல் திறத்தால் விளக்குங்கள், சிங்க ஏறுகள் போல் பணியாற்றி வாருங்கள் என்று பொன்னுரை புகன்று அனுப்பி வைத்தார்.

காலை 7-30 மணிக்கெல்லாம், திராவிடர் கூட்டம், கோட்டை ரயிலடியைச் சுற்றி வெள்ளம் போல் குழுமிவிட்டது.

பார்க்கும் இடம் எங்கும் கணக்கற்ற போலீஸ் லாரிகளும், ஜீப்களும், மோட்டார்களும் பவனி வந்தபடி இருந்தன.

கோட்டை ரயிலடிக்கு மூன்று பர்லாங் தூரம் கிழக்கே இருக்கும் கடற்கரை ரயிலடியிலிருந்து, கோட்டைக்கு மூன்று மைல் தூரம் மேற்கே இருக்கும் மவுண்ட்ரோட் "விக்டரி ஹவுஸ்" வரையில், பத்தடிக்கு ஒரு கான்ஸ்டபில் வீதம், கையில் துப்பாக்கி சகிதம், நிறுத்திவைக்கப்பட்டிருந்தனர்.

அதுபோலவே, கோட்டை ரயிலடிக்குப் பின்புறம் உள்ள ஒய். எம். சி. ஏ. சிறுவர் நகரம் அரை மைல் முழுவதும், போலீஸ் மயமாக்கப்பட்டிருந்தது.

**போலீஸ்! போலீஸ்! எங்கும் போலீஸ்!**

மவுண்ட் ரோட் சர்க்கார் மாளிகைக்கு அருகிலிருந்து கோட்டைக்கு வரும் சாலை நெடுகவும், ஏராளமான போலீஸ், பத்தடிக்கு ஒருவர் வீதம், இரண்டு பக்கமும், நிற்கவைக்கப்பட்டிருந்தனர்.

அதுபோலவே, கோட்டை ரயிலடிக்கு வடக்கே, சைனாபஜார் மாடர்ன் கபே வரையிலும், போலீஸ் நிரம்பியிருந்தது.

சாதாரண போலீஸ் மட்டுமல்லாமல் ரிசர்வ் போலீஸ் வேற, ஆயுதபாணிகளாக ஏராளமாகக் கொண்டுவரப்பட்டிருந்தனர்.

பல லாரிகளில், கும்பல் கும்பலாகத் தடிகள் குவித்துவைக்கப்பட்டிருந்தன. சில லாரிகளில் சாதாரண தடியைவிட இரண்டு மடங்கு நீளமான பாணாதடிகள் வேறு நிரம்பியிருந்தன.

போலீஸ் கான்ஸ்டபில்கள் மட்டும் 2000

# போலீஸ்! போலீஸ்! எங்கெங்கும் போலீஸ்!

பேருக்குமேல் இருக்கும். அது தவிர சப் இன்ஸ்பெக்டர்கள், இன்ஸ்பெக்டர்கள், அசிஸ்டெண்ட் கமிஷனர்கள், டிபுடி கமிஷனர் ஆகியோரும் கோட்டை வட்டாரத்தைச் சுற்றிச் சுற்றி ரோந்து வந்துகொண்டிருந்தனர்.

மாகாண இன்ஸ்பெக்டர் ஜனரலும் நேரில் வந்திருந்தார்.

## குவிந்தது குவிந்தது போலீஸ் கூட்டம்!

மாகாண போலீஸ் இயந்திரம் முழுதுமே அன்று கோட்டை ரயிலடியைச் சுற்றியே சுழன்றுகொண்டிருந்தது என்று கூறலாம்—அந்த அளவுக்கு, போலீஸ், சாரை சாரையாக, சாரை சாரையாக, நிமிஷத்திற்கு நிமிஷம் வந்து இறங்கியபடி இருந்தனர்.

கோட்டை ரயிலடியைச்சுற்றி, இந்தக் கோடியில் துறைமுகப் பகுதி வரையிலும், அந்தக் கோடியில் மவுண்ட் ரோட் வரையிலும், சுமார் 4 மைல் விஸ்தீரணம், திரும்பிப் பார்க்கும் இடத்தில் எல்லாம் போலீஸ் மயமாக இருந்தது.

சைமன் கமிஷனுக்குக் கருப்புக்கொடி காட்ட தேசீய வாதிகள் ஏற்பாடு செய்த காலத்திலும் சரி, வெள்ளையர் ஆட்சியை எதிர்த்துப் பல சமயங்களில் செய்யப்பட்ட அறப்போர் நேரங்களிலும் சரி, இவ்வளவு பிரம்மாண்டமான போலீஸ் ஏற்பாடு சென்னையில் இருந்ததே கிடையாது

வானத்தின் விரிவுபோல, வெள்ளத்தின் பெருக்கம் போல, அலைகடலின் அகலம் போல, ஒய். எம். சி. எ. சிறுவர் நகரத்திலும் கோட்டை ரயிலடியிலும், அதைச் சுற்றியுள்ள நால்வீதிகளிலும், குழுமியிருந்த திராவிட மக்கள், மிகவும் அமைதியாகக் காட்டப்பட இருக்கிற கருப்புக்கொடி வெறுப்பு அடையாளத் தெரிவிப்பு நிகழ்ச்சியின்போது, இவ்வண்ணம், மத்திய சென்னை பகுதியையே போலீஸ் கடலில் மூழ்கடிக்கவேண்டிய தேவை என்ன என்பதே தெரியாமல் திகைத்தனர்.

## ஊரார் உரையாடல்!

"அடே அப்பா! இவ்வளவு போலீசை நான் என் ஆயுளிலேயே கண்டதில்லை!"

"எனக்கும் வயசு அறுபது முடிந்துவிட்டது. ஆனால் இதுவரை நான் இப்படி ஒரு போலீஸ் ஏற்பாட்டைப் பார்த்ததில்லை!"

"என்னய்யா இது அக்கிரமம்! இங்கென்ன உள்நாட்டுப் போரா நடக்கிறது, இப்படி, பட்டாளம் பட்டாளமாகப் போலீசைக் கொண்டு வந்து குவிக்க'"

"என்னதான் ஆளத்தெரியாதவர்கள் ஆள்கிறார்கள் என்றாலும், அதற்கும் ஒரு கேள்வி கேட்பாடு கிடையாதா, வரை முறை இல்லையா, இப்படியா பொதுமக்கள் பணத்தைப் பாழாக்குவது!"

"எதற்காக அய்யா இங்கே இவ்வளவு போலீஸ்? இங்கென்ன கொள்ளைக்கூட்டமா வந்திருக்கிறது! கொலைகாரர்களா கூடியிருக்கிறார்கள்! ஆயுதபாணிகளாகவா வந்திருக்கிறார்கள் மக்கள்!"

"நல்ல சர்க்காரய்யா இது! வெளிநாட்டிலிருந்து அரிசி வாங்கு என்றால் பணமில்லை என்கிறார்கள். ஆனால் அமைதியே உருவாக வந்த இக்கூட்டத்தை ஒழிக்க இப்படி ஆயிரக்கணக்கில் போலீசை வைத்துப் பணத்தைப் பாழுக்குஇறைக்கிறார்கள்!"

"யார் பணம் இதெல்லாம், யார் பணம்ன்னு கேட்கிறேன்! டில்லிக்காரன் பணமில்லை—எல்லாம் நம்ப பணந்தான்—இந்த ஊர்க்காரன் பணந்தான் இப்படிப் பாழாகிறது!"

இப்படியெல்லாம் மக்கள் பேசிக்கொள்ளலாயினர் பார்க்கும் இடமெங்கும் போலீஸ் நீக்கமற நிறைந்திருந்த "அற்புதக்" காட்சியைக் கண்டு!

ஆனால் இதெல்லாம் எதற்கு என்பது விரைவிலே புரிந்துவிட்டது புரிந்ததும், மக்கள், இப்படியும் ஒரு கொடுங்கோல் ஆட்சி உண்டா என்று வாய்விட்டுக் கூறிக் கதறினர்.

## அமைதிபுரி மீது ஆவேசப் புயல்!

சரியாக மணி 7-30 இருக்கும். மாபெருங் கூட்டம். அனைவரும் அமைதியின் சின்னங்களாக, பொறுமையின் உருவங்களாக, கருப்புக்கொடி தாங்கியவண்ணம் நின்றிருந்தனர். ஒரு சலசலப்புமில்லை. சிறு குழப்பமும் இல்லை. கூச்சல்—கலாட்டா—ஆரவாரம் எதுவுமில்லை. 9-30 மணிக்கு வரவேண்டிய ஆச்சாரியாரின் வருகையை எதிர்நோக்கி, தென்னாட்டவர் நன்மையைப் புறக்கணித்து, வடநாட்டவர் ஆட்சியில் அவரும் பங்கு கொண்டிருப்பது, தென்னாட்டுக்கு அவர் இழைக்கும் மகத்தான துரோகம்—எனவே அவரை வெறுக்கிறோம் என்பதை விளக்குவதன் அறிகுறியாக அவருக்குக் கருப்புக்கொடி காட்டிவிட்டுச் சென்றுவிடுவது என்ற நோக்கத்துடன் மிகவும் அமைதியாக இருந்தனர் மக்கள்.

# பயங்கரமான தடியடி! பல்லாயிரவருக்குக் காயம்!

திடீரென்று போலீசார் பெருங்கூட்டமாக வந்து, பயமுறுத்தும் தோரணையில் நின்று கொண்டு, கூட்டத்தின் முன்னணியில் இருந்த சிலரைப் பார்த்து, நீங்கள் போகவேண்டும் என்று கட்டளையிட்டனர். உடனே, அங்கிருந்த மக்கள், "மக்கள் கலனை மறந்த மந்திரிகளுக்குக் கருப்புக் கொடி காட்டித் தம் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்வது, எந்த ஜனநாயக நாட்டிலும் அனுமதி அளிக்கப்பட்டுள்ள சாதாரண பிரஜா உரிமை—எனவே எங்களைக் கலைந்துபோகும்படி கூறுவது முறை அல்ல—நாங்கள் கலைவதற்கில்லை" என்று பணிவான முறையில் தெரிவித்துக்கொண்டனர்.

அவ்வளவுதான் தாமதம், உடனே, திடீரென்று, எந்தவித முன் எச்சரிக்கையுமின்றி, போலீசார், பெருங்கூட்டமாக வந்து, மக்கள் மீது புலிகள்போல் சீறிப் பாய்ந்து, தடிகளை வேகமாகச் சுழற்றி, மிருகத்தனமான முறையில், ஓங்கி ஓங்கி அடித்தனர்.

லாரிகளிலும், ஜீப்களிலும், டாக்சிகளிலும், போலீசார், கும்பல் கும்பலாகவந்து, கூட்டத்தைக் கிழித்துக்கொண்டு உட்புகுந்து, அங்கங்கே இறங்கி, மக்களைச் சுழன்று சுழன்று அடிக்கலாயினர்.

சாதாரண போலீசைவிட ரிசர்வ் போலீஸ் காரர்களே இந்தத் 'திருப்பணி'யைத் தீவிரமாகத் தொடங்கினர்.

### இரத்த வெள்ளத்தில் மிதந்தனர் திராவிடர்!

கோட்டை ரயிலடிக்குக் கிழக்கே, உட்பக்கமாக உள்ள "சிறுவர் நகர"த்தைச் சுற்றிலுமிருந்த மக்களைக் கோரமான முறையில் தடியால் அடித்து வெளியே துரத்தினர் போலீசார். அப்படித் துரத்தப்பட்டவர்களிற் சிலர், ரயில் நிலயத்தின் ஓரத்திலே உள்ள முள் வேலியிற் சிக்கிக் கொண்டபோது, தூரத்தே இருந்த போலீசார் ஓடிவந்து, சிறிதும் ஈவு இரக்கமின்றி, முள்ளிற் சிக்கிச் சிதைந்துகொண்டிருந்த அவர்களை, அந்த நிலையிலேயே, முகத்திலும் முதுகிலும், காலிலும், கையிலும், மார்பிலும் பலமாகத் தாக்கினர். தாக்கப்பட்டதும், அந்த வீர வாலிபர்கள் உடலிலிருந்து, குருதி, பீறிட்டுக்கொண்டு வெளிவந்து, அவர்கள் ஆடை முழுவதையும் இரத்தத்தில் தோய்த்துவிட்டது. இரத்த வெள்ளத்தில் மிதந்து கொண்டிருந்த அவர்களை, அந்த நிலையில் போலீசார், மறுபடியும் தடிகொண்டு தாக்கிய கோரக் காட்சி, கல் நெஞ்சையும் கரைக்கும் தன்மை மிகுந்தது.

இந்த நேரத்தில் ரயிலடிக்கு வந்த ஒரு ரயிலிலிருந்து, ஏராளமான பிரயாணிகள் வந்து இறங்கி, டிக்கட்டை டிக்கட் பரிசோதகரிடம் கொடுத்துவிட்டு, ரயில் நிலயத்தைவிட்டு வெளியே வருவதற்காக, அங்கிருந்த 'ஓவர் பிரிட்ஜ்' ஏறினர். உடனே ஏராளமான போலீசார், திடீரென்று அந்தப் பக்கம் திரும்பி, ஒரு பாவமும் அறியாத அந்த நிரபராதிகளை, இந்த இடத்தில் இன்னது நடக்கிறது என்பதே தெரியாமல் வந்த அந்தப் பிரயாணிகளை, கொடுமை! கொடுமை! தடியால் அடித்துப் படுகாயப்படுத்திப் பிடித்துத் தள்ளினர்.

அவர்களிற் பலர் பெண்கள். பலர் பச்சிளம் பாலகர்கள். பலர், தாம்பரம்—கிண்டி—சைதாப்பேட்டை—கோடம்பாக்கம்—தியாகராய நகர் முதலிய பகுதிகளிலிருந்து சென்னையில் உள்ள உயர் நிலைப்பள்ளிகளுக்குத் தினந்தோறும் வழக்கமாகவரும் மாணவர்கள். பலர், அதுபோலவே சுற்றுப்புற ஊர்களிலிருந்துசென்னையில்உள்ளவருமானவரி அலுவலகம், அக்கவுண்டன்ட் ஜனரல் அலுவலகம், செக்ரிடேரியட் அலுவலகம், கஸ்டம்ஸ் அலுவலகம், பங்கீட்டு அலுவலகம், முதலிய பல அலுவலகங்களுக்கு வரும் சர்க்கார் உத்யோகஸ்தர்கள். பலர், ஆங்கிலோ இந்தியர்கள். இவர்கள் அனைவரையுமே, போலீசார், தடியால் அடித்து, இரத்தம் சிந்தும்படி செய்த காட்சி மிகவும் கொடுமையானது.

### ஆங்கிலோ இந்தியர் கதறல்

ஓர் ஆங்கிலோ இந்தியருக்குக் கையில் பலமான அடிபட்டு, குருதி கொட்டத் தொடங்கியதும், அவர், What nonsense the police is doing! I'm going to my office and theyare beating me! Is this an orderly Govt? இது என்ன அக்கிரமம் இந்தப் போலீசார் செய்வது? நான் என் ஆபீசுக்குப் போகிறேன்—என்னை அடிக்கிறார்கள்! இது என்ன ஒழுங்குமுறை தெரியாத சர்க்கார்! என்று உரத்த குரலில் ஆங்கிலத்தில் கதறியது, கோட்டை ரயில் நிலயத்தில் கணீர் என்று எதிரொலி செய்தது.

### மூதாட்டியின் 'சாபம்'!

ஒரு கிழவி—பாவம்! அவள் தள்ளாடித் தள்ளாடி நடக்கும் பரிதாபக் காட்சியைப் பார்த்தால் அவளைத் திட்டிப் பேசக்கூட யாருக்கும் தோன்றாது—ஆனால், போலீஸ் அந்த மூதாட்டியைப் பலவந்தமாகப் பிடித்து இழுத்து அடித்துக் கீழே

# புலவரேறு அப்பாதுரையைப் புழுவெனத் துடிக்கவைத்த அக்கிரமம்!

தள்ளியபோது, அந்த அம்மையார் சுருண்டு விழுந்து கொண்டே, அய்யோ இப்படியும் ஒரு அக்ரம சர்க்கார் இருக்கிறா என்று கூவிய நிகழ்ச்சி, பக்கத்தே இருந்த பலருடைய கண்களைக் கலங்கவைத்து விட்டது.

**பச்சிளம் பாலகன் பரிதவிப்பு!**

வேறோர் இடத்தில் 13 வயதும் நிரம்பாத இளஞ்சிறுவன் ஒருவனைப் போலீசார் குண்டாந் தடிகொண்டு தாக்க அவன் புழுப்போல் விழுந்து துடித்த சம்பவம், அந்தோ பரிதாபம பரிதாபம்!

மற்றோர் இடத்தில், ஒரு வாலிபர் தலைமீது, பலமான தடியடி விழுந்து, மண்டை கிழிந்து, இரத்தம், குபீரென்று வெளிவந்து, இரத்தத் தடாகம் ஆக்கிவிட்டது அந்த இடத்தை.

**புலவர் தலைவருக்குப் பலமான அடி!**

இன்னோர் இடத்தில், பன்மொழிப் புலவர் அறிஞர் **கா. அப்பாதுரை** ஏம். ஏ. **எல். டி.** அவர்கள் கீழே விழுந்துவிட, ஓடிச்சென்று ஓர் பார்ப்பன அசிஸ்டெண்ட் கமிஷனர் அவரைத் தடிகொண்டு தன் பலங்கொண்டமட்டும் தாக்கிவிட்டு, I know who you are! You deserve this! நீ யார் என்பது எனக்குத் தெரியும்! உன்னை இப்படித்தான் செய்யவேண்டும் என்று உரத்தகுரலில் கூறி, மறுபடியும் அடிக்கலானார். அப்பாதுரை அவர்களுக்கு வலது கால், வலது கை, முதுகு இந்த இடங்களில் பலமான அடி. அவரை நையப் புடைத்து அந்த இடத்திலேயே போட்டுவிட்டு அந்த ஆரிய இன்ஸ்பெக்டர் வேறு பக்கம் திரும்பி வேறு பலரை அடிக்க ஓடினார். ஐந்து நிமிஷங்கட்கு மேல் இருக்கும், அப்பாதுரையார், எழுந்திருக்கவும் சக்தியின்றி அங்கேயே விழுந்து கிடந்தார். அந்த நேரத்தில், தற்செயலாக அந்தப் பக்கத்தில் அவரைப் பார்க்க நேரிட்ட திருவொற்றியூர் சண்முகம், டாக்டர் தர்மாம்பாள், கே. கே. நீலமேகம் ஆகியோர் அவரைத் தூக்கி, தாங்கள் ஏறிவந்த காரில் போட்டுக்கொண்டு போயினர். பிரைவேட் டாக்டர் ஒருவரிடம் சிகிச்சைக்காக அவர் கொண்டுசெல்லப்பட்டார்.

இப்போது மணி எட்டிருக்கும். மேலும் மேலும் ஏராளமான கூட்டம் கோட்டை ரயிலடியை நோக்கி நாற்புற வீதிகள் வழியாகவும் வந்து குவியலாயினர். இது கண்ட போலீசார் அந்தப் பெருங்கூட்டத்தை ஊடுருவிப் பாய்ந்து, அதனை ஏழெட்டுப் பிரிவாகப் பிரித்து, ஒரு கூட்டத்தைத் தடியால்அடித்து,பலரைக் காயப்படுத்தி. சைனாபஜார் மாடர்ன் கம்ப வரை துரத்தினர். வேறொரு கூட்டத்தைக் கடற்கரை ரயில்நிலையம் வரை துரத்தியடித்தனர். மற்றொரு கூட்டத்தை ஜெனரல் ஆஸ்பத்திரிக்கருகில் உள்ள சென்னை மருத்துவக் கல்லூரிவரை துரத்தி அடித்தனர். இம்முறை, மிகவும் பலமான தடியடிப் பிரயோகம் செய்யப்பட்டது.

**செங்குருதி சிந்தினர் சென்னைத் திராவிடர்!**

ஓர் இடத்தில், சென்னை மாவட்ட தி. மு. க. துணைச்செயலாளர் **கே. எம். கண்ணபிரானை** நான்கு போலீசார் சூழ்ந்துகொண்டு, முதுகிலும் கால் கை இடுப்பிலும் பலமாகத் தாக்கினர். நல்ல அடி.

சென்னை மாவட்ட தி. மு. க. பொருளாளர் தோழர் **சி. வி. ராஜன்** அவர்களுக்குத் தலையில் படுகாயம். மண்டை வீங்கிவிட்டது. கைகால் அசைக்க முடியவில்லை.

சென்னை கார்ப்பரேஷன் உறுப்பினர் தோழர் **முனுசாமி** அவர்களுக்கு மார்பிலும் தோள் பட்டையிலும் காயம். அவரை ஒரு கான்ஸ்டபில் சட்டையைப் பிடித்து இழுத்துக் கிழித்துவிட்டு அடித்திருக்கின்றார்.

சென்னை மாவட்ட தி.முக. நிர்வாகக் கமிட்டி உறுப்பினர் **டாக்டர் கணேசனுக்குப்** பலமான அடி. காலில் படுகாயம்.

காஞ்சி நகராட்சிக் கழக உறுப்பினர் **சி. வி. ராஜகோபால்**, தோழர் **எம். எஸ். எம். மோகைதீன்**, ஆகியோருக்கும் பலமான தடியடி. தோழர் **முல்லைக்கோம்மை வடிவேலுக்கும்** அடி.

**பெண்களுக்குத் தனி மரியாதை!**

**தோழியர் ஏ. பி. செல்லக்கண்ணம்மாள்** அவர்களுக்கு, வலது கையில், கோரமான அடி. ஆழ்ந்த காயம். அந்த அம்மையாரை போலீசார், தோகையர்குலம் என்றும் பாராது, பச்சாத்தாபம் சிறிதுமின்றி, பலமாகத் தாக்கிக் கொண்டிருக்கும் போது, பக்கத்தே இருந்த யாரோ ஒருவர் பெண்களைக் கூடவா அடிப்பது—இது நன்றாயிருக்கிறதா என்று கேட்டார். உடனே, அடித்துக் கொண்டிருந்த போலீசார், "**பெண்களுக்குத்தானே; தனி மரியாதைதானே! இதோ!**" என்று கூறிக்கொண்டே மேலும் ஓர் அடி அடித்து, அந்த அம்மையாரை அங்கேயே கிடத்திவிட்டு சென்றுவிட்டனர்.

# இராமராஜ்ய ஆட்சியில் மாதர்குலத்திற்கும் தடியடி!

**அலர்மேலு அப்பாதுரை அம்மையார், நூர் தனம் ஜான் ஆகியோருக்கும் காயம்.**

மொத்தத்தில் குறைந்தது ஆயிரம்பேருக்குமேல் படுகாயம். அவர்களில் சுமார் எழுபதுபேர் மட்டும் எப்படி எப்படியோ தங்கசாலைத் தெரு 202-ம் எண்ணுள்ள தி.மு.க. தலைமை நிலையத்தை அடைந்தனர். அடைந்ததும், அருகே இருந்த டாக்டர் ஒருவரைக் கொண்டு, அவர்கட்குத் தக்க சிகிச்சை செய்து அனுப்பப்பட்டது. [அவர்கள் பெயர் வேறோர் இடத்தில் வெளியிடப்பட்டுள்ளது.]

படுகாயம் அடைந்தவர்கள் ஆயிரம் என்றால் சுமாரான காயம் என்று சொல்லத்தக்க அளவு காயம் அடைந்தவர்கள் பல்லாயிரவர் ஆகும்.

## தியாகத் தழும்பு பெற்றது திராவிடம்!

கால் கை முறிந்தவர் பலர். முதுகு நொறுங்கி சுருண்டு வீழ்ந்தவர் பலர். மண்டையில் அடிபட்டு சித்தம் கலங்கி சாய்ந்தவர் பலர். முகத்தில் படுகாயமடைந்து மூர்ச்சையானோர் பலர். மார்பில் அடிபட்டும் அஞ்சாது நிமிர்ந்துநின்ற தீரர் பலர்.

பலருடைய உடல் இரத்த வெள்ளமாகி விட்டது. பலருடைய ஆடை சிவந்த நிறமாகிவிட்டது. பலருடைய மேனியில் தியாகத் தழும்புகள் அழியா இடம் பெற்றுவிட்டன.

பல்வேறு அலுவலகங்களுக்குச் செல்வதற்காக கோட்டை ரயிலடியில் வந்திறங்கி, திடீரென்று தடியடிக்குள்ளாகி, சர்க்காரை சபித்தவண்ணம், கொட்டும் குருதியைத் துடைத்த வண்ணம், வீட்டிற்குத் திரும்பிச் சென்ற சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் நூற்றுக்கணக்கானோர்.

சென்னை 'மெயில்' ஆங்கில இதழின் போட்டோகிராபர், கோட்டைப் பகுதியில் வந்து, நிகழ்ச்சிகளைக் கவனித்து, நிழற்படங்கள் எடுக்க முனைந்தார். அக்கிரம சர்க்காரின் ஆணவத் தடியடி அவர் உடலையும் பதம் பார்க்க மறந்துவிடவில்லை. அவருக்கு நல்ல காயம். அவருக்கு மட்டுமல்ல! அவருடைய 'காமிரா' வுக்கும் காயம்! காமிராவின் முன்பக்கம் நசுங்கி, நாசமாகிவிட்டது.

## கடைகள் மூடிக் கொண்டன!

பத்திரிகை நிருபர்கள் பலருக்கும் நல்ல அடி விழுந்தது என்று தெரிகிறது.

சைனா பஜாரிலும், போலீஸ் லாரிகள் சுற்றிச் சுற்றிச் சுழன்று, மக்களை ஓட ஓட விரட்டியடித்து, காட்டுமிராண்டித்தனமாக நடந்துகொள்ளும் அநாகரிகச் செயலைக் கண்டு, அருவருப்பும் அச்சமும், ஆட்சியாளர்கள்மீது அளவற்ற வெறுப்பும் எரிச்சலும் கொண்ட, பழக்கடை மண்டபத்தில் உள்ள கடைக்காரர்கள் யாவரும் தங்கள் கடைகளை உடனே அடைத்துவிட்டனர்.

எதிர் வரிசையில் இருந்த பேனாக் கடைகள், சில்லறைக்கடைகள், சிற்றுண்டிச் சாலைகள் யாவும் மூடப்பட்டுவிட்டன.

சுமார் ஒருமணி நேரம், சைனாபஜார், சுடுகாட்டு அமைதியில் ஆழ்ந்துகிடந்தது. ஓர் ஆள் கூட தெருவில் இல்லாதபடி, போலீஸ் "வீரர்கள்", அந்த வட்டாரத்தில் உள்ள வீதிகளில் உலவிக்கொண்டிருந்த பொதுமக்கள் யாவரையும் தடியால் அடித்து விரட்டிவிட்டு ராம ராஜ்ய தர்பார்நடத்தினர்.

வெள்ளைக்காரர் ஆட்சிக் காலத்தில் நடைபெற்ற 'ஜலியன்வாலாபாக்' தடியடிக் கொடுமையைவிட நூறுமடங்கு அநாகரிகமும் கொடுங்கோன்மையும் மிருகத்தன்மையும் நிறைந்ததாக இருந்தது, அன்றையதினம், அங்கே, ஆட்சியாளர்கள், தம் அதிகாரிகள்மூலம் நடந்துகாட்டிய நடத்தை!—என்று, பொதுமக்கள், ஆங்காங்கே, வாய்விட்டுப் பேசி, ஆட்சியாளரின் ஆகாத போக்கைக் கண்டு கொதிக்கும் தம் உள்ளக் குமுறலை வெளிப்படுத்திக்கொண்டனர்.

சில இடங்களில், சிறு கூட்டம் அல்லது சில பலர் நின்றுகொண்டிருந்தால், அவர்களின் இருபுறமும் இரண்டு போலீஸ் ஜீப்களை நிறுத்தி வைத்து, அவர்களை எந்தப் புறமும் தப்பி ஓட முடியாதபடி செய்துவிட்டு, போலீசார் அவர்களை மண்டையிலடித்துப் படுகாயப்படுத்தி இருக்கின்றனர் என்று தெரிகிறது.

போலீஸ் தடி மக்கள் உடலை நொறுக்க, நொறுக்க, மேலும் மேலும் கூட்டம் வந்து குவிந்தபடி இருந்தது. மீண்டும் மீண்டும் தடியடி நடந்தபடி இருந்தது.

எழும்பூர் ரயில்வே மெயில் சார்டர் எஸ். சுப்பையா தலையில் பலத்த அடிபட்டு ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத் தூக்கிச் செல்லப்பட்டார்.

எ. எம். மணி, ராகவன், டி. குப்புசாமி ஆகியோரும் ஆஸ்பத்திரிக்கு எடுத்துப் போகப்பட்டனர்.

# அஹிம்சா வீரர்களின் அடக்குமுறை ஆவேசம்!

**உள்ளம் உருக்கும் நிகழ்ச்சிகள்**

நாற்புற வீதிகளிலும், திடீர் திடீரென்று 'ஜீப்'களிலும், டாக்ஸிகளிலும், லாரிகளிலும் போலீசார் வந்து இறங்குவர். தடாலென்று அங்கே இருப்பவர்கள்மீது பாய்ந்து அடிப்பர். அவர்கள் சுருண்டு வீழ்வர். வீழ்ந்த பிறகும் போலீசார் பலமாக அடிப்பர். அடிபட்டவர்கள் உடலிலிருந்து இரத்தம் ஆறென ஓடும். உடல் துடிதுடிக்கும் உறுப்புகள் தத்தளிக்கும். ஆனால், போலீசார், அவர்கள் படும் வேதனைக் காட்சிகண்டு அணுவளவும் மனம் பதறாமல், வேறு பக்கம் திரும்பி, அங்கே இருப்பவர்களையும் இதேபோல அடித்து நொறுக்கி நையப்புடைப்பர். அவர்கள் போகும் இடமெங்கும் இரத்தக் காடாகும். இத்தகு நிகழ்ச்சிகள், பல இடங்களில், அடிக்கடி நடந்தபடி இருந்தது.

ஓர் இடத்தில், சாதாரண உடையில், சி. ஐ. டி. போலீசார் நின்றிருந்தனர். அவர்களையும் கழகத் தோழர்கள் என்றெண்ணிக்கொண்டு, ஆடை தரித்த போலீசார், பலமாகத் தாக்கினர். 'ஐயய்யோ! நாங்கள் சிஐடிகள்! என்று அந்த சி. ஐ. டிக்கள் கூவியும், போலீசார் அதைக் கவனிக்கவில்லை. அந்த சி. ஐ. டிக்களுக்கு அடி விழுந்தபடிதான் இருந்தது.

சில தோழர்களை, அசிஸ்டென்ட் கமிஷனர் தோழர் கிருஷ்ணன் நாயர் தடியால் அடித்துக் கொண்டிருந்தபோது, அந்த வேகத்தில் அவருடைய கைக் கடியாரம் கழன்று கீழே விழுந்துவிட்டது அடிபட்டுக்கொண்டிருந்த ஒரு தோழர் இதைப் பார்த்ததும், உடனே, அதனை எடுத்து, தன்னை அடித்துக்கொண்டிருந்த அதே அசிஸ்டென்ட் கமிஷனரிடம் கொடுத்தார். இந்தப் பெருந்தன்மைமிகு பண்பைக் கண்டதும் சில நிமிஷ நேரம் வியப்பால் திகைத்து நின்றுவிட்டார் கிருஷ்ணன் நாயர்.

**பார்த்தசாரதி—கோவிந்தசாமி, மணிமொழியார்—அங்கமுத்து, கைது**

கோட்டை ரயிலடிக்கு எதிரே நின்றுகொண்டு, மக்களை ஓரமாக ஒதுங்கி இருங்கள் என்று இயன்றஅளவு ஒழுங்குபடுத்திக் கொண்டிருந்த தோழர்கள் கே. கோவிந்தசாமி, காஞ்சி மணிமொழியார், டி. எம். பார்த்தசாரதி, ஆர். அங்கமுத்து ஆகியோரின் அருகே வந்து, ஓர் இன்ஸ்பெக்டர், 'நீங்கள் கைது செய்யப்பட்டிருக்கிறீர்கள்' என்று கூறினார். உடனே, நால்வரும், புன்முறுவல் பூத்த முகத்துடனே, போலீஸ் லாரியில் ஏறினர். வண்டி சென்ட்ரல்ஸ்டேஷனுக்கு அருகேவந்ததும், ஏனோ தெரியவில்லை, வண்டியை நிறுத்தி, இன்ஸ்பெக்டர், வேறோர் இன்ஸ்பெக்டருடன் கலந்தாலோசித்துவிட்டு, நால்வரையும் பார்த்து, நீங்கள் கீழே இறங்கலாம் என்று கூறி விடுதலை செய்துவிட்டனர்.

இதற்குள்ளாக மணி 9-30 ஆகிவிட்டது. கடற்கரை ரயிலடியிலிருந்து மருத்துவக் கல்லூரி வரை, அதுபோலவே, கோட்டை ரயிலடியிலிருந்து மாடர்ன் கபே வரையில், போலீஸ் லாரிகள் சுற்றிச் சுற்றி, ஓர் ஆள்கூட இல்லாத முறையில் தடியால்அடித்துவிரட்டிக் காலிசெய்துவிட்டு ஆச்சாரியாரை அழைத்துக்கொண்டு வந்தனர்.

இவ்வளவு ஏற்பாடுகளையும் மீறி, எப்படியோ நூற்றுக்கணக்கான தோழர்கள், ஆச்சாரியார் வந்த நேரத்தில், அவருக்குக் கருப்புக் கொடி காட்டி, தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொண்டனர்.

பகல் 10-30 மணிவரையில், போலீசார் ஆர்ப்பாட்டம் ஓயவில்லை.

**அலைசெங்சின்றி ஊர்வலம்!**

ஆச்சாரியார் திரும்பிச் சென்றதும், பொது மக்களில் ஒரு சாரார், ஊர்வலமாகத் திரண்டு, அடக்குமுறை ஆட்சி ஒழிக! வடநாட்டு ஏகாதிபத்யம் ஒழிக! மக்களை மதியா மந்திரிகள் ஆட்சி ஒழிக! சிந்தனைச் சிற்பி அண்ணாதுரை வாழ்க! முதலான வீர முழக்கங்களை எழுப்பிய வண்ணம், கோட்டை ரயிலடியிலிருந்து புறப்பட்டு, சட்டக் கல்லூரி வழியாக, சைனா பஜாருக்கு வந்து, பழக்கடை, பூக்கடை, முதலியவற்றைக் கடந்து, தங்கசாலை வீதியிற் புகுந்து, 202. தங்கசாலைக்கு வந்து, அண்ணா அவர்களின் கட்டளையை எதிர்நோக்கி நின்றது. அண்ணா அவர்கள் வெளியே வந்து, வீரத் திராவிடர்கள் அன்று சிந்தியுள்ள இரத்தம் வீண்போகாது என்றும், இவ்வண்ணம் புரட்சி வீரர்கள் பலர் கொட்டிய குருதியால் மெழுகப்பட்ட பிறகுதான் இலட்சியப் பாதை வெற்றிபுரியில் நம்மைக் கொண்டு சேர்க்கும் என்றும் தெரிவித்து, திராவிட சமுதாயத்தின் அன்றைய மகத்தான சாதனைக்குத் தன் நன்றியறிதலைச் சமர்ப்பித்து, அனைவரும் அமைதியாகக் கலைந்து செல்லவேண்டும் என்றும், மாலை 5-30 மணிக்கு இராயப்பேட்டைக்கு ஆச்சாரியார் வருகிறபோது மீண்டும் காலைபோலவே பணியாற்றுமின் என்றும் கேட்டுக்கொண்டார்.

பிறகு, கூட்டம் கலைந்து சென்றது.

கூட்டம் கலைந்தபிறகு, மூன்று லாரிநிறைய போலீசைக் கொண்டுவந்து, தங்கசாலை நிலையத்தின்

# மக்களையெல்லாம் விரட்டிவிட்டு மதிமந்திரியார் வந்த பரிதாபம்!

இரு புறமும் லாரிகளை நிற்கவைத்துவிட்டு, இரண்டு அசிஸ்டென்ட் கமிஷனர்கள், தோழர்கள் பார்த்தசாரதி, என். வி. நடராசன் ஆகியோரை அழைத்து, மாலையில் இராயப்பேட்டையிலும் இதேபோல் செய்யப் போகிறீர்களா என்று கேட்டனர். அதற்கு, தோழர்கள், ஆம் என்று கூறினர்.

அசி. கமிஷனர்கள் :—வேண்டாம். எச்சரிக்கை செய்கிறோம். விளைவு விபரீதமாயிருக்கும்.

பார்த்தசாரதி, என். வி. நடராசன் :—நாங்கள் யாரும், இப்போது எதுவும் செய்வதற்கில்லை. எங்கள் கழக மத்திய கமிட்டி, டில்லி அமைச்சர்களுக்குக் கருப்புக்கொடி காட்டவேண்டும் என்று தீர்மானம் செய்திருக்கிறது, அந்தத் தீர்மானப்படிதான் நாங்கள் நடக்க முடியும்.

அசி. கமி :—மறுபடியும் கூறுகிறோம். விளைவு விபரீதமாயிருக்கும்.

பார்த்தசாரதி, என். வி. நடராசன்:—உங்கள் முன் அறிவிப்புக்கு நன்றி. உங்கள் கடமையை நீங்கள் செய்யுங்கள். எங்கள் கடமையை நாங்கள் செய்கிறோம்.

பிறகு, அண்ணா அவர்களை அழைத்து, அசிஸ்டென்ட் கமிஷனர்கள், முன்கூறிய வண்ணமே கூறினர். அதற்கு, அண்ணா அவர்கள், ஆட்சியாளர்கட்குக் கருப்புக்கொடி காட்டுவது அகில உலகத்திலும் அனுமதிக்கப்படும் சாதாரண பிரஜா உரிமை என்றும், அந்த உரிமையையும் மறுக்கிறார்கள் என்றால் அக்கிரமம் இதைவிட வேறிருக்கமுடியாதென்றும், வடநாட்டு ஏகாதிபத்யத்தை எதிர்ப்பதன் அறிகுறியாக டில்லி சர்க்கார் மந்திரிகட்குக் கருப்புக்கொடி காட்ட வேண்டுமென்று கோவில்பட்டியில் கூடிய தி. மு. க. மத்திய கமிட்டி கட்டளையிட்டிருக்கிறதென்றும், எனவே காலையில் நடந்ததைப் போலவே மாலையிலும், கருப்புக்கொடி காட்டப்பட்டே தீரும் என்றும் அழுத்தந் திருத்தமாகத் தெரிவித்துவிட்டார்கள்.

## மாலை நிகழ்ச்சி : மீண்டும் அதே கதை !

மாலை 5-30 மணிக்கு, இராயப்பேட்டையில், ஓட்டல் அஜாந்தாவுக்கு அருகில் உள்ள இந்திய ஆபீசர்கள் கழகத்திற்கு, ஆச்சாரியார் வருகிறார் என்பதறிந்து, பகல் 2 மணி முதலே, கோவில்பட்டி தீர்மானப்படி அவருக்குக் கருப்புக்கொடி காட்டுவதற்காக, திராவிட முன்னேற்றக் கழக வீரர்களும் வீராங்கனைகளும், சென்னை மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பட்டாளம் பட்டாளமாக, கூட்டம் கூட்டமாக, ஆயிரமாயிரமாக, இராயப்பேட்டை வட்டாரத்தில் வந்து நிறையலாயினர்.

திராவிட உலகு இங்ஙனம் திரண்டு வரும் என்பதை நன்கறிந்திருந்த போலீசார் காலையிலிருந்தே, இராயப்பேட்டை சுற்று வட்டாரம் மூன்று மைல் தொலைவிற்கு, 'சர்வம் போலீஸ் மயம் ஜகத்' என்று கூறத்தக்க நிலையை உண்டாக்கி வைத்திருந்தனர் !

## தடுக்கி விழுந்த இடமெல்லாம் போலீஸ்

போலீஸ்! போலீஸ்! எங்கு பார்த்தாலும் போலீஸ் ! வீதிகளிலே இரு மருங்கும் போலீஸ் ! சந்து பொந்துகளிலே சாரை சாரையாக போலீஸ்! மாளிகை ஓரங்களிலே போலீஸ் ! மக்கள் நடமாடக்கூடிய இடங்களிலெல்லாம் போலீஸ்! இரண்டு அல்லது மூன்று கஜ தூரத்திற்கு ஒரு போலீஸ் கான்ஸ்டேபிள் ! கண்ட கண்ட இடங்களில் எல்லாம் ரிசர்வ் போலீஸ் !

ஓட்டல் அஜந்தாவுக்கு இந்தப் புறமும் அந்தப் புறமுமாக, சுமார் ஒரு மைல் தொலைவிற்கு, வீதி நெடுக, ஏராளமான போலீசார், குதிரைமீதேறி நின்றவண்ணம், காட்சி தந்தனர். **மக்கள் ஆதரவை இழந்துவிட்ட காங்கிரஸ் 'கனம்கள்', இனி, இதுபோல, போலீஸ் தயவைத்தானே நாடியாகவேண்டும்—இதிலென்ன வியப்பிருக்கிறது ?**

ஆயிரக்கணக்கான போலீசாரின் துணையின்றி, பல்லாயிரக்கணக்கான தடிகளின் பாதுகாப்பின்றி, 'டில்லி தேவதைகள்', தென்னாட்டில் நுழையமுடியாது என்ற நிலை ஏற்பட்டுவிட்டது ! நாமல்ல இப்படிக் கருதுவது ! சென்னை சர்க்கார்! எனவேதான், இங்ஙனம், ஆச்சாரியார் வருவதற்கு நான்கைந்து மணிநேரம் முன்னராகவே, போலீஸ் இலாகாவையே, இராயப்பேட்டையில் இறக்குமதி செய்துவிட்டனர் இராமராஜ்ய காங்கிரஸ் சர்க்கார் !

## தடியடி தர்பார் ஆரம்பம் !

4 மணி இருக்கும். பொதுமக்கள் கூட்டம் முப்பதாயிரம் நாற்பதாயிரம் என்று கூறத்தக்க அளவு, திரளாகக் குழுமிவிட்டது. போலீசார் உடனே தடியடி தர்பாரை ஆரம்பித்துவிட்டனர்.

ஓட்டல் அஜந்தாவுக்கு இந்தக் கோடியில் ஒரு மைல் வரையிலும், அந்தக் கோடியில் ஒரு மைல் வரையிலும், இரண்டுமைல் தொலைவு, ஒரு தனி ஆள் கூட இருக்கமுடியாதபடி, விரட்டி விரட்டி அடித்தது போலீஸ்.

# சிறைக்கஞ்சாச் சிங்கக் கூட்டம் சிறைபுகுந்த காட்சி

இராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனுக்கு அருகிலிருந்து, குதிரைகள்மீ தேறிக்கொண்டு, போலீசார், தலைதெறிக்கும் வேகத்தில் குதிரைகளை ஓட்டுவர். குதிரைகள் பிடரியில் கால்படப் புயல்போல் பாய்ந்து ஓடும். அந்த நேரத்தில், வீதியிலே, யார் நடமாடிக்கொண்டிருந்தாலும், அந்த முரட்டுக் குதிரைகளின் காலடியிற் சிக்கி நொறுங்கிவிடுவர். எட்வர்ட் எல்லியட் ரோட் வரை, குதிரைப் போலீசார் இங்ஙனம் ஓடுவர். பிறகு, வந்தவழியே திரும்பி, மீண்டும், வாயுவேகமாக மனோவேகமாக என்பார்களே அதுபோலப் பாய்ந்து ஓடிவருவர். இந்தக் காட்சி, அடிக்கடி நடந்துகொண்டிருந்தது.

**வீதியா? சுடுகாடா?**

ஓட்டல் அஜந்தா அமைந்துள்ள வீதியில் டிராம் ஒன்றைத்தான் ஓட அனுமதி தந்தனர் போலீசார். டிராம் மட்டும் இல்லாமல் இருந்திருந்தால், அந்த வீதியை அந்த நேரத்தில் வீதி என்று யாரும் கூறமாட்டார்கள். சுடுகாடு என்றுதான் கூறுவார்கள். அந்த அளவுக்கு, ஆள் அரவமே இல்லாதபடி, வீதி முழுவதையும் 'காலி' செய்துவிட்டார்கள் சென்னை சர்க்கார், தம் போலீஸ் தீரர்களை பட்டாளம் பட்டாளமாக அனுப்பி!

**லாரிகளில் ஏற்றினர்! தொலைவில் கொண்டுபோயினர்!**

எவ்வளவு கொடுமையாக 'தர்பாரை' நடத்தியும், கூட்டம், புற்றிலிருந்து புறப்படும் ஈசல் போல, திடீர் திடீரென்று, எதிர்பாரா இடங்களில் இருந்தெல்லாம் புறப்பட்டபடி இருக்கக் கண்ட போலீசார், சிறிது நேரத்திற்குப் பிறகு புதுமுறை ஒன்றைக் கையாளலாயினர். தடதடவென்று போலீஸ் லாரியை ஓட்டிவந்து, தடாலென்று ஓர் இடத்தில் நிறுத்துவது; சட்டென்று கீழே இறங்குவது; அங்கே இருப்பவர்களைக் கிடுகிடுவென்று வண்டியில் ஏற்றி மடமடவென்று ஆட்டுமந்தைகள்போல் அடைத்து, கடகடவென்று வண்டியை ஓட்டிக்கொண்டு போய், எங்கோ தொலைவில் அவர்களை இறக்கிவிடுவது—இதுதான் அவர்கள் கையாண்ட அந்தப் புதுமுறை! அந்த முறையும் கோரிய பலன் தராமற்போகவே, போலீசார், இப்படியெல்லாம், மக்கள் கூட்டம் கூட்டமாக வந்துகொண்டிருப்பதற்கும், எப்படித் துரத்தியடித்தாலும் எப்படியோ மக்கள் மீண்டும் மீண்டும் வந்து நி[illegible]துகொண்டிருப்பதற்கும் காரணம், எங்கேயோ மறைவாக இருந்துகொண்டு கட்சித் தலைவர்கள் இவர்களைத் தூண்டிவிட்டுக்கொண்டிருப்பதுதான் என்று தவறாக எண்ணி, அப்படி எண்ணியதால், அறிமுகமான கட்சிப் பிரமுகர்கள் யார் யார் தங்கள் கண்கட்குத் தென்படுகிறவர்களோ அவர்களையெல்லாம் கைது செய்யத் தொடங்கினர்.

நடிப்புப் புலவர் கே. ஆர். ராமசாமி
ஈ. வெ. கி. சம்பத்
கே கோவிந்தசாமி
டாக்டர் சி. கணேசன்
ஜலகண்டபுரம் ப. கண்ணன்
போளூர் சுப்ரமண்யம்
முல்லை வடிவேலு
என். வி. நடராசன்
சி. வி ராஜகோபால், காஞ்சி நகராட்சிக் கழக உறுப்பினர்
ஈழத்தடிகள்
தில்லை வில்லாளன்
வி. முனிசாமி, சென்னை நகராட்சிக் கழக உறுப்பினர்
கே. எம். கண்ணபிரான்
சுந்தரேசன்
கே. வி. கே. சாமி, சென்னை
கே. கே. நீலமேகம், குடந்தை
குறிஞ்சிப்பாடி சாம்பசிவம்

இந்தப் பதினேழு பேரையும், போலீசார், அவரவர்கள் கிடைத்த இடத்தில் அங்கங்கே கைது செய்து, சிலரை இராயப்பேட்டை போலீஸ் ஸ்டேஷனிலும், சிலரை மைலாப்பூர் போலீஸ் ஸ்டேஷனிலும், கொண்டுசென்று காவலில் வைத்தனர்.

**ஆச்சாரியார் நிலைமை! பரிதாபம்! பரிதாபம்!!**

ஏறத்தாழ 5-30 மணிக்கு, ஆச்சாரியார், இந்திய அலுவலாளர்கள் கழகத்திற்கு வந்தார். மக்கள் வரவேற்பு உண்டா அவருக்கு? கிடையாது! வரும்போது கைதட்ட ஆளுண்டா? இல்லை! போற்றிப் புகழும் கூட்டம் இருந்ததா— இல்லை! ஜெ கோஷம்? துளியும் இல்லை! இரண்டு மைல் தூரத்திற்கு மனித வாசனையே இல்லாமல் செய்யப்பட்ட நிலையில், தன்னந்தனியாக வெறும் போலீஸ்காரர்களின் அதிகார முகங்களைத் தவிர பொது மக்களின் 'அன்பு முகம்' ஒன்றைக்கூட காண முடியவில்லையே என்ற துக்கம் நெஞ்சைப் பிளக்க, இப்படியும் ஒரு காலம் வந்ததே—இதுவோ நம் கதி என்ற வெட்கம் மனதை அரிக்க, தலையைக் குனிந்தவண்ணம். முகம், உள்ளத்தில் நடமாடும் வேதனைக் காட்சி

(5-ம் பக்கம் பார்க்க)

சென்னை மாகாண

# திராவிட மாணவர் முன்னேற்றக்கழக,

# முதல் மாநாடு

## சென்னை செயிண்ட் மேரி மண்டபத்தில்

## 8-11-50 புதன் காலை 9 மணிக்கு

தலைவர்:—தோழர் இரா. சத்தியேந்திரன் B.A., B.L.,
திறப்பாளர்:—அறிஞர் C. N. அண்ணாதுரை M. A.
வரவேற்புத் தலைவர்:—தோழர் K. A. மதியழகன் B. A.

பல அறிஞர் பெருமக்களும், மாகாணமெங்குமுள்ள கல்லூரி உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவிகளின் பிரதிநிதிகளும் கலந்து கொள்வர்.

**திராவிட மாணவ, மாணவிகளே! திரண்டு வருக.**

| | | |
|---|---|---|
| V. கண்ணன் | T. பாண்டியன், | K. ராம மூர்த்தி |
| மயிலை. பா. சீனுவாசன் | பொருளாளர். | T. K. பொன்னுவேலு |
| (உயர்நிலைப்பள்ளிச் செயலாளர்கள்) | | (கல்லூரிச் செயலாளர்கள்) |

சிறந்த கதைப் புத்தகங்கள்!

ஏ. வி. பி. ஆசைத்தம்பி எழுதிய
ஆண்களை நம்பலாமா? 0 3 0

இராதாமணாளன் எழுதிய
அய்யோ கடவுளே! 0 3 0

இரண்டு புத்தகங்களும் புக் போஸ்டில் பெற ஆறணா ஸ்டாம்புகள் அனுப்பலாம்.
விற்பனைக் கழிவு 25% அனுப்பும் செலவு இனும்.
கிடைக்குமிடம்:
எம். சூரி
14, ஏ. குப்பையர் தெரு, சென்னை—1.

## ஆட்சியாளரின் தடியடி தர்பாரை எதிர்த்து!

சென்னை கார்ப்பரேஷனில் தீர்மானம்!

★

24—10—50 செவ்வாய்க்கிழமையன்று, சென்னை கார்ப்பரேஷனின் கூட்டம் தொடங்கியதும், கார்ப்பரேஷன் உறுப்பினர் தோழர் என். ஜீவரத்தினம் சென்னை சர்க்கார் அன்று, நடத்திவரும் அக்கிரமான தடியடித் தர்பாரைக் கண்டிப்பதன் அறிகுறியாக, கார்ப்பரேஷன் கூட்டத்தை ஒத்திவைக்க வேண்டுமென்று ஒருதீர்மானத்தைக் கொண்டுவந்தார். தீர்மானம் நகர மேயரால் நிராகரிக்கப்பட்டது. உடனே தோழர் ஜீவரத்தினம், மேயரின் போக்கைக் கண்டிக்கும் முறையில் கவுன்சில் கூட்டத்தை விட்டு வெளியேறினார்.

சிறந்த நூல்கள்

| | ரூ. | அ. |
|---|---|---|
| நல்ல தீர்ப்பு | 0 | 4 |
| நாடும் ஏடும் | 0 | 6 |
| போர் முரசு | 0 | 8 |
| திராவிடர் சமூகநிலை | 0 | 4 |
| தமிழ் வாத்தியார் | 0 | 12 |
| தி● வி. க. மணிமடல் | 1 | 8 |
| ஏது சுயமரியாதை | 0 | 8 |

மாணவர் பதிப்பக வெளியீடுகளான மேற்கண்ட நூல்களின் விற்பனை உரிமையை நாங்கள் பெற்றிருப்பதால் தேவைக்கு எங்கட்கு எழுதுங்கள்.

பகுத்தறிவுப் பாசறை
பவழக்காரத் தெரு, சென்னை.

Edited, Printed and Published by P. C. Manickavachagam alias Kanchi Manimoliyar, Free Printers 147, Coral Merchant St., Madras. Joint Editor: M. Ilancheliyan B. A.(Hon)